
கோக்கார்





நகரத்தார்

திங்கள் இதழ்

61. D, உசுமான் சாலை - சென்னை-17.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

சௌமிய கார்த்திகை * நவம்பர்-17, 1969

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-50

ஆசிரியர் — புலவர்நாகசண்முகம்

பரிந்துரையாளர் — எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல்.

குறிப்பு ஒன்று — பேரேடு எட்டு

அடுத்த இதழில்

மாமியாருக்கு வந்த கோபம்

ஆறு. அழகப்பன், எம். ஏ., எம். லிட்

★

மாற்றங்கள் தேவை

மாநகரி அ. முருகப்ப செட்டியார்

★

ஏழையர்க்கு உதவும் இனிய செல்வம்

புலவர். ந. இராமாயி

★

செய்தி மலரில் சிறந்த பலரின் அறிமுகம்

நாட்டு நடப்பில் நல்ல நல்ல செய்திகள்.

★

வேலை தாரீர்

புதிய பகுதி

படித்துப் பட்டம் பெற்று வேலை வாய்ப்பினை நாடி உள்ள இளைஞர்களுக்கென்றே தொடங்கப்பட்டுள்ள நல்லதோர் பகுதி!

உங்களைப் பற்றிய விபரங்களைப் புகைப் படத்தோடு அனுப்புங்கள். மாதந்தோறும் மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம்.

உ
சிவமயம்



வண்ணத் தமிழ் வாழ்க!

வைர விழாச் சபை வாழ்க!

நாட்டிற்குச் செய்கின்ற நல்ல பணிகள் இறைவனுக்குச் செய்கின்ற தொண்டுக்கு ஒப்பானது.

நல்ல பணிகளைச் செய்கிறவர்களும் பயன்தனைப் பெறுகிறவர்களும் ஒருசேர மகிழ முடியும்.

தொண்டுள்ளமும், தூய பக்தி உள்ளமும் கொண்ட வ. பழ. பழநியப்ப செட்டியார் அவர்கள், வ. அண. அண்ணாமலை செட்டியார் அவர்கள், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் ஆகிய பெருமக்கள் மேலைச் சிவபுரியில் சன்மார்க்க சபை என்ற நல்லதோர் அமைப்பினை அறுபதாண்டுகளுக்குமுன் கண்டார்கள்.

அறுபதாண்டுகள்!

பகலாகி இரவாகிக் கழிந்த எண்ணற்ற நாட்கள்: அவற்றைக் கடந்து மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை வைரவிழாவினைக் காண்கின்றது.

வண்ணத் தமிழையும் வளரும் சைவத்தையும் காப்பதில் சபை ஈடுஇணையற்ற பெருந்தொண்டுபுரிந்து வந்திருக்கின்றது.

சபை தனது அறுபதாண்டு கால வரலாற்றில் செய்துவந்துள்ள பணிகளை நோக்குகின்றபோது இனி அது மேற்கொள்கின்ற பணிகள் இமயமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலைச் சிவபுரி என்ற சிற்றூரில் தோன்றி தமிழுக்கும் சைவத்திற்கும் அறுபதாண்டுகளாக, பெருஞ்சுடராய் நாடு முழுமைக்கும் ஒளிவீசி நிற்கின்ற சன்மார்க்க சபையின் வைரவிழாச் சிறப்பிதழாக, இந்த இதழைப் பெருமிதத்துடன் வெளியிடுகின்றோம்.

வண்ணத் தமிழ் வாழ்க!

வைர விழாச் சபை வாழ்க!

என மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

—*—

நாசிக்கில் நமது சங்கம்


இறைவனைப் பற்றிக் கூறுகின்றபொழுது தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்று கூறுவார்கள். அதுபோல நம்மரபினரின் அறக் கொடைகளும் இங்கு அங்கு எனாதபடி எங்கெங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றன.

கடந்த ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக நாசிக் பஞ்சவடியில் நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டி தண்டாயுதபணி மந்திர் அறம் வளர்த்து வருகின்றது.

அங்கு ஆண்டுதோறும் அருள்திரு தண்டாயுதபாணி சுவாமிக்கு கந்த சஷ்டி விழாவும் திருக் கார்த்திகை விழாவும் கொண்டாடப் பெறுவதுபோல இவ்வாண்டும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

இந்த விழாவில் அப் பகுதியில் வாழும் தென்னிந்திய மக்கள் மிகவும் ஈடுபாடோடு கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

இறையருளைக் கங்கைக் கரையிலிருந்து அள்ளித் தருகின்ற பஞ்சவடி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தின் தொண்டு என்றென்றும், வளர, வாழ இறைவன் அருள் புரியட்டும்.



காலை நேரம்.

அலுவலகத்தில் அமர்ந்து அன்று அஞ்சலில் வந்த மடல்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மெய் சிலிர்ப்பதற்கும், உள்ளம் உவகைப் பெருவெளியில் மிதப்பதற்கும், இதுதான் காரணம் என்றோ இன்ன பொழுதுதான் ஏற்படும் என்றோ யாரும் வரையறுத்துக் கூற இயலுமோ?

மடல்களினூடே விளங்கிய அழைப்பு ஒன்று என்னைப் பரவச நிலைக்கு ஆளாக்கிற்று.

தமிழ் அன்னையே இந்த ஏழைப் புலவனை நோக்கி வந்து விட்டது போன்ற ஓர் உணர்ச்சி!

'மகனே நீ நலமாக இருக்கிறாயா?' என்று கேட்பதுபோன்ற ஓர் எண்ணம்.

அதுமட்டுமோ? உன்னுடைய வாழ்க்கையில் எந்த நாட்களைப் பொன்னான நாட்கள் என்று கருதுகிறாய்? என்று அன்னை கேட்பது போன்ற ஒரு பிரமை.

என்னுள் எழுந்த அந்தக் கேள்விக்கு நானே பதில் சொல்லிக் கொள்ளுகிறேன்.

'தாயே, மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையாரால் நடத்தப் பெறுகின்ற கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் நான் தமிழ் பயின்ற நாட்களும் அக் கல்லூரியிலேயே விரிவுரையாளனாகப்பணியாற்றிய நாட்களும் தான் பொன்னான நாட்கள்' என்று நான் கூறுகிறேன்.

பிரமை அகல்கிறது. உண்மை அகலுமோ? அந்த நாட்கள்தான் பொன்னான நாட்கள் என்பது உண்மையிலெல்லாம் உண்மை!

உலகில் தோன்றியவர்களெல்லாம் பொருளீட்டும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். ஆனால் எத்தனை பேரால் புகழ் ஈட்டும் முயற்சியில் ஈடுபட முடிகிறது?

புகழீட்டுவதற்குத் துணை நிற்கும் என்னுடைய எழுத்தாற்றல் பேச்சாற்றல் எல்லாம் சன்மார்க்க சபை எனக்கிட்ட பிச்சையல்லவா?

மேலே குறித்த எண்ணங்கள் தோன்றி விரிவாகி நடைபோடுவதற்குக் காரணமான அந்த அழைப்புத்தான் என்ன அழைப்பு? என்று அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் உங்களுக்கும் அதைச் சொல்லிவிட வேண்டும் என்ற ஆவல் எனக்கும் தோன்றுகின்றன.

மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையின் வைரவிழா அழைப்பு அது.

அழகுத் திருமுருகன் அன்புத் தமிழ் மருகன், பிள்ளைக் கனி அமுதன், பொன்பத் திருச்செல்வன் வேலால் வினைதீர்க்கும் வெற்றி மயில் அழகன், தமிழகம் முழுதும் தான் வீற்றிருக்கிறான். என்றாலும், அவன் படைவீடுகளாக ஏற்றுக் கொண்டவை ஆறே யன்றோ? தமிழ் அன்னை, அவள் நிலத்திலும் அதனைத் தாண்டிய பிற மாநிலங்களிலும் கடல்கடந்த நாடுகளிலும் வாழ்கின்றாள் என்றாலும் அவள் தனக்கென்று சில இடங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறாள். அத்தகைய இடங்களில் ஒன்று மேலைச்சிவபுரிதனில் விளங்குகின்ற சன்மார்க்க சபை!

பொதிகையிலே பிறந்து, பூம்பொழில்களை தவழ்ந்து, மதுரைச் சங்கத்துத் தொட்டிலில் வளர்ந்து, காலமெலாம் போற்றத்தக்க கன்னியாகிப் பாண்டிய மன்னர்கள் பக்கத்திருக்க, சேரரும் சோழரும் துணைநிற்க, பேராட்சி செய்தவள் நம் பெருமைமிகு தமிழன்னை.

அந்தத் தாய், எந்தச் சூழ்நிலையில் மேலைச் சிவபுரியில் குடியேறினாள்? அவள் அன்பு மைந்தர்களான வ. பழனியப்பச் செட்டியார் அவர்களும் வ. அண்ணாமலைச் செட்டியார் அவர்களும் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களும் தமிழ் அன்னையை எப்போது அங்குக் குடியேற்றினார்கள் என்பனவற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டாமோ?

அமுதினை நஞ்சென்றும், உறவினைப் பகையென்றும், உயர்வினைத் தாழ்வென்றும் கூறுவாரை நாம் என்ன சொல்வோம்? பித்தம் ஏறிய நிலை. சித்தம் கலங்கிய நிலை என்று சொல்வோம். ஆனால், இந்த மண்ணிலே எண்ணிஎண்ணி வியக்கத்தக்கதும் அதே பொழுது நினைத்து நினைத்து வருந்தத் தக்கனவுமான நிகழ்ச்சிகள் ஓரிரு நூற்றாண்டுகளாகவே நடைபெறத் தொடங்கின.

சங்க காலம், காவிய காலம், புராண காலம், சிற்றிலக்கிய காலம் என்ற காலங்களெல்லாம் மறந்தும் மறக்கப்பட்டும் போன பொல்லாத காலம் அது.

அடிமைப் படுகிறவன் தன் மொழியாலும் அடிமைப் படுகிற பொழுது தான் முழு அடிமையாகிவிடுகிறான்.

தாழ்ந்திருக்கின்ற மரங்கள் பெருங்காற்றில் கூட வாழ்ந்து விடுகின்றன. உயர்ந்து நிற்கின்ற மரம் தான் பெருங்காற்றிலிருந்து சிறுகாற்று வரை தாக்கப்பட்டு அல்லலுறுகின்றன. காய்த்த மரம் தான் கல்லடிபடும். இஃது உலக இயற்கைதான். ஆனால் கல்லெறிவதையே ஒரு புனிதமான செய

லாகக் கருதுகின்றவர்கள் பெருகி விடுகின்ற பொழுது அந்த மரம் பூத்ததும், பிஞ்சு விட்டதும், காய்த்ததும், பாட்டாய்ப் பழங்கதையாய்ப் போய்விடுகின்றன. கல்லெறிந்தவர்களோ இது காய்க்கும் என்பது பொய்; இது வெற்று மரம் என்று வருணிப்பதற்கு வழி வகை ஏற்பட்டு விடுகிறது. இவற்றுக் கெல்லாம் காரணம், தோட்டக்காரன் தூங்கியதுதான். தூங்கவில்லை யென்றால் கல்லெறிந்தவர்களிடம் தன் சுயநலத்திற்காக எதையோ பெற்றுக் கொண்டு, கண்டும் காணாமல் இருந்திருக்க வேண்டும்.

பூத்துக் காய்த்துக் கனி நல்கும் மரம் வெற்று மரமென்று வருணிக்கப்படுகின்றது போலத் தான் அன்னைத் தமிழ் மொழி வருணிக்கப் பட்டது?

சங்க மருவிய தங்க மொழி அகமாகப் பூத்தமொழி - சிலம்பாய் - மேகலையாய் - சிந்தாமணியாய் ஒலித்த மொழி-கம்பர் நாவிலும் சேக்கிழார் நாவிலும் நடை பயின்ற நல்லமொழி, ஆழ்வார், நாயன்மாரி அகங்களிலே குடியேறிப் பாவாகி, பண்ணும் ஆகித் தேவாரமாய், திருவாசகமாய், பாசுரமாய்ப் பவனி வந்து பரமனை- நல்ல இறைவனை - மக்கள் உள்ளங்கள் தோறும் குடியிருக்கச் செய்த தெய்வ மொழி! அந்த மொழிக்கு— நம் சொந்த மொழிக்கு உயிராகி, உணர்வாகி, உள்ளமும் ஆகிநிற்கும் உயர்ந்த மொழிக்கு உயிரில்லை என்று சிலர் கூறினர். தனித்தியங்கும் ஆற்றலுண்டோ உம் மொழிக்கு? என்று கேட்டனர். கேட்டவர்களே இல்லையென்று முடிவும் கட்டினர்.

அம்மட்டோ? இயலிசை நாடகம் என்ற முப்பிரிவினைக் கொண்டதாக நம் மொழி இருந்தும் கூட, அதாவது இசை நாடகம் என்ற பெரும் பிரிவுகள் முப்பிரிவில் வெளிப்படையாக இணைந்திருந்தும் கூட, உம்மொழியிலே இசை இல்லை யென்றனர். நாடகம் இல்லை என்றனர். சுருங்கச் சொன்னால் எதுவும் இல்லை என்றனர். இசையைத் தெலுங்கு மொழி பற்ற, இறைவனை வடமொழி சூழ்ந்து கொள்ள, ஆட்சியை ஆங்கிலம் கைப்பற்றியது.

புயலுக்கிடையே போராடுகின்ற அகல் விளக்குகளைப் போலத் தமிழன்னையின் தொன்மையினையும் வன்மையினையும் அறிந்த சில அறிஞர் பெருமக்கள் இந்த நிலை கண்டு கலங்கினர். காலம் என்று வரும் என்று காத்திருந்தனர்.

நான்கு வார்த்தைகள் ஆங்கிலம் தெரியாதா? தெலுங்குக் கீர்த்தனங்கள் இரண்டு தெரிந்து கொள்ள மாட்டோமா? என்று நம் மக்களே எண்ணத் தலைப்பட்ட அவலமான காலத்தில் தான் சபை தோன்றியது.

சபை என்று அதைச் சாதாரணமாகச் சொல்லலாமோ? நான்காவது தமிழ்ச் சங்கம் என்றே அதைச் சொல்லலாம்!

இம்மை இன்பத்திற்கு மொழியும் மறுமை இன்பத்திற்குச் சமய நெறியும் வேண்டும். ஆய்ந்து தோய்ந்த, அறிவில் மிக்கவர்களான பழநியப்பரும் அண்ணாமலையாரும் பண்டித மணியாரும் சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக என்ற பொன்மொழியோடு, தாரக மந்திரத்தோடு சபையைத் தொடங்கியது நாமெல்லாம் செய்த பெரும்பேறு அன்றோ?

தாய்க்கும் தாயான தங்க மணிச்சபை தன்னுடைய நீண்ட

வரலாற்றில் ஆற்றியுள்ள பணிகள் கணக்கற்றவை, காலத்தால் அழியாதவை. அழிக்க முடியாதவை. தமிழக மெங்கும் பரந்துபட்டுப் பள்ளிகள் தோறும் கல்லூரிகளிலும் வேறு பல் வேறு துறைகளிலும் கூட விளங்குகின்ற புலமைச் செல்வங்களை ஈன்ற எழில் சபையின் பெருமை, கால வெள்ளங்களையெல்லாம் கடந்து நிற்க வல்லது.

ஏற்றப் பெருத விளக்கால் என்ன பயன்? போற்றப்படாத புலமையால் யாருக்கு நலம்?

தமிழ் கூறும் நல்லுலகத்தில் சபையோர் போற்ருத புலவர் உண்டோ? புலவர் என்பவர் நகைச்சுவைக் கதாபாத்திரங்களாய், ஏளனத்திற்கு உரியவர்களாய் - எல்லார்க்கும் எளியவர்களாய் ஆனநிலையால், ஆக்கப் பட்ட நிலையில் புலவர்கள், பொன்னுடையாரையும், பொருள் மிக்காரையும் விட உயர்ந்தவர்கள்; தமிழன்னையின் பேரன்புப்பிள்ளைகள் என்பதனை அறுபது ஆண்டுகளாய் உணர்த்தி அவர்கள் நிலையை உயர்த்தி வருகின்ற பெருமை சபைக்கே உரியதாகும்.

உந்து வண்டிகளெல்லாம் கூடத் தமிழ் முழங்கும் இந்த நாள் போல அல்லாது முற்றிலும் மாறுபட்டிருந்த அறுபது ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழன்னைக்கு பெரு விழாவாய்த் திருவிழாவாய் ஆண்டுதோறும் விழா எடுக்கின்ற அமைப்பும் சிறப்பும் பெறுகின்ற பேற்றினைச் சபை போல எத்தனை அமைப்புகள் தமிழகத்தில் பெற்றிருக்க முடியும்?

மொழிதான் நாட்டுப்பற்றுக்கும் சமய உணர்விற்கும் முதலானது; தாயானது. ஆனல், சமயப் பற்றும் நாட்டுப் பற்றும் இல்லையென்ருல் அந்த மொழி எவ்வாறு உயர்வடையும்? தாய்க்குப் பிள்ளைகளும் பிள்ளைகளுக்குத் தாயும் பெருமை தேடித் தர வேண்டும்.

செந்தமிழ்க் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று நினைத்த பழநியப்பர் அண்ணுமலையார் பண்டித மணியார் என்ற மூவேந்தர்களும் கணேசரை முன்னிறுத்தியல்லவா செந்தமிழ்க் கல்லூரியைத் தொடங்கியிருக்கிருர்கள்?

சமய உணர்வைப் புகட்டுவதற்கு ஏனைய இறைவர்கள் பெயரை வைத்தாலும் போதும். ஆனல் எடுத்த செயல்களை இடையூறின்றிக் காப்பவன் கணேசன் என்பதால் அவன் பெயரை வைத்தாரகள் போலும்! நல்ல மனத்தோடு கணேசரை முன்னிறுத்தி அவர்கள் காரியத்தைத் தொடங்கியிருக்கிருர்கள் என்பதற்குக் கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக்குத் தாயான சன்மார்க்க சபைக்கு நிகழ்கின்ற வைர விழாவே தக்க சான்று.

பறம்பு மலையை யாண்ட பாரி மன்னன் கொடைக்கு இலக்கணம் வகுத்தவன்; இலக்கியமாகவும் திகழ்ந்தவன். தன்னூர் என்றில்லாது முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு ஈந்தவன். கொழுகொம்பின்றிக் கொடி வாடியது கண்டு தான் வாடியவன். தங்க மணித்தேரைக் கொடிபடர நிறுத்தியவன். அவன் புகழைப் பாட அன்றுகபிலர் இருந்தார்.

தமிழுக்குச் சன்மார்க்க சபையென்ற ஆலயத்தை நிறுவிய முப்பெருமக்களையும் போற்ற இன்று நாடெங்கு மல்லவா புலவர்கள் விளங்குகிருர்கள்.

அந்த மண்ணுடைய வளம் என்று எண்ணி மகிழத்தக்க வகை

யிலேயே இது அமைந்துள்ளது. (பாரி ஆண்ட பரம்பு மலைக்கு அருகில்தான் சன்மார்க்க சபையினைத் தன்னகத்தே கொண்ட மேலைச்சிவபுரி என்ற ஊர் விளங்குகின்றது. பாரி மன்னனுடைய முந்நூறு ஊர்களில் இதுவும் ஒன்று என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள்)

பொது நிறுவனங்களைத் தொடங்குவதும் தடைப்படாது நடத்துவதும் சிறப்புற வளர்ப்பதும் அரிதினும் அரிது.

இதனைச் சன்மார்க்க சபையினை நிறுவிய வ. பழ. குடும்பத்தார் எளிதினும் எளிதாகச் செய்து வருகிறார்கள்.

அரியது எளியதானதற்குக் காரணம் பரம்பரையாக அந்தக் குடும்பத்தாருக்கு உரியதாக விளங்குகின்ற தொண்டுள்ளம்.

பழநியப்பர் அண்ணாமலையார் என்ற பெருமக்களைத் தொடர்ந்து சாமிநாதரும் அவர்களுக்குப் பின்னே சிதம்பரனாரும் இப்பொழுது அவர்களோடு பழநியப்பரும் (சீனி அண்ணன்) சபையினைக் கட்டிக்காத்து நாளும் வளர்த்து வருகிறார்கள்.

அந்நாள் பண்டித மணியார் துணை நின்றது போல இந்நாள் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் துணைநிற்கிறார்கள்.

இந்தியத் தோல்பதனிடும் கழகத்து இயக்குநர் நாகப்பர் அவர்கள் பொருளாலும் பொன்னுருக அன்பாலும் பெருந்துணை புரிந்து வருகின்றார்கள்.

அ. சாமிநாதர் அவர்களும் விசுவநாதர் அவர்களும் உற்ற துணையாக நின்று வருகிறார்கள்.

அழகு தமிழ் வளர்க்கின்ற கல்லூரிக்கு அழகப்பர் முதல்வராகவும் ஆற்றல் மிகுந்த அறிஞர்கள் பேராசிரியர்களாகவும் அமைந்தது நற்பேறாகும்.

எனவே, அறுபதாண்டு நிறைவினைப் பெற்ற சன்மார்க்க சபை, தளர்ச்சி என்பதனைச் சிறிதும் காணாது வளர்ச்சியினை முழுமையாகப் பெற்று விளங்குகிறது.


தமிழன்னைக்கு ஆலயமான சபையும் அவளைப் போல என்றும் கன்னியாக விளங்குகின்றது என்று சொன்னால் மிகையாகுமோ?

தமிழகம் என்ற பெருங்கடலுக்கு அறுபது ஆண்டுகளாக ஒளி வீசும் கலங்கரை விளக்கமாக விளங்குகின்ற தாய்ச்சபை என்றென்றும் வாழட்டும்! எழில் கொண்டு விளங்கட்டும்! என்னைப் போன்ற எண்ணற்ற பிள்ளைகளை உருவாக்கட்டும்! என்று சபைவாழ அதன் அவையிலேயே வீற்றிருக்கும் வெற்றி விநாயகனை வேண்டுகின்றேன்.

ஃ ஃ ஃ

துன்மார்க்கக் கொள்கையெலாம் தூசாகிப் போயொழியத்
தூயவர்கள் செல்வாக்கு நாடெங்கும் மேலோங்கச்
சன்மார்க்க சபைகண்டார் தமிழறிஞர் சான்றோர்கள்
சந்ததமும் வாழ்கவெனச் சங்கே நீ முழங்கிடுவாய்!

கண்கள்



மேலைச்சிவபுரி வெ. வெங்கடராமய்யர் அவர்கள்

சமயங்கள் பலவாய்ச் சாற்றினும் ஒருவனே தேவன். அவன் அடையும் நெறிகள் பலவற்றுள்ளும் சைவ நெறியே சாலச் சிறப்புடைத்து. இதையே 'சைவ முதலாம் அளவில் சமயமும் வகுத்து' என்று உள்ளமுருகிக் கூறுகின்றார் தாயுமானவர். எனவே இறையைக் காட்டிக் கலப்பிப்பது சைவமொன்றே. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தமொழி தமிழ் மொழி. மலர்தலை உலகம் மன்னுற்றோங்கத் தமிழ் மொழியாண்டும் பரவுதல் வேண்டும். நன்னெறியாம் சைவநெறி நிறைந்தது தமிழ் மொழி ஒன்றே என்பதையும் அறிதல் வேண்டும். மனவிருள் நீக்கும் மணிவிளக்கு தமிழ் ஒன்றே.

சைவமும் தமிழும் தழைத்து ஓங்குமெனின் அதுவே மக்கள் நன்னெறி நின்று வாலறிவன் நற்றாள் பெற்ற நல்ல வாயில்களாகும். அத்தகைய சைவத்தையும் தமிழையும் தழைப்பிக்க மேலைச் சிவபுரி சன்மார்க்கசபை நிறுவிச் சாற்றரும் தொண்டு புரிந்த தகைசால் சகோதரர்கள் இருவர். ஒருவர் மேதகு வ. பழ. சா. பழனியப்ப செட்டியார் அவர்கள். ஒருவர் மேதகு வ. பழ. சா. அண்ணாமலை செட்டியார் அவர்கள்.

சகோதரர்களின் தொண்டினை எவ்வளவு போற்றினாலும் தகுமன்றோ? அண்ணல் பழநியப்பரைப் பற்றி, பெரும் புலவரான சோழவந்தான் அரசஞ் சண்முகனார் அவர்கள் பாவடிவில் கூறிய பைந்தமிழ்ச் சிறப்புரையே இப்பொழுது என் நினைவிற்கு வருகின்றது.

உலகத்து நின்னடியார்
யாவரையும் நீயென
உணர்ந் தொழுகு
பக்தி நெறியும்
ஓதனத் தாலுடையி
ருன்மருந் தால்வறுமை
உற்றவரை ஓம்பும்
அளியும்
பலகற்ற மேலோர்
உடன்கூடி அவர் நண்பு
பாராட்ட வாழும்
உயர்வும்
பலகலையு மேலோங்கு
பழனியப் பக்குரிசில்
பல்லாண்டு
பல்லாண்டுமே

இலகத் திடத்திஞெரு
நோய் சிறிது மின்றியே
இன்புடன் விளங்க
அருள்வாய்
இனிய முருகாற்றுப் படைக்
கவிதை கேட்டொரா
யிரவரை அளித்த
புலவர்
திலகனே, ஒருவரைக் காத்தலரி
தன்று காண்
செருவினில் பணில
முத்தைச்
சினையென்று நாரை
அடைகாக்கின்ற சிக்கில்வாழ்
சிங்கார வடிவேலனே.

என்பது அவர் முருகுவடிவான வேலனைப் பாடி யிறைஞ்சிய பாக்களில் ஒன்று.

அன்னாரும், அவரிளவல் அண்ணாமலையாரும் தோற்றி வளர்தத சன்மார்க்க சபைக்கு இவ்வாண்டு அறுபதாண்டு நிறைவுறுகிறது. அவ்வமயம் நிகழும் அருமை மிகு வைர விழாப் பெருமை, பெரு நிறைவெய்தி ஆன்றோர்கள் ஆசிபெற வாழ்த்துகின்றேன்!!

மேதகு பழனியப்பரின் மூத்த குமாரரான மேதகு ப. சா. சாமிநாதன் செட்டியார் அவர்கள் தம் முன்னோர் போன்றே சபைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துக் காத்து வரலானார்கள்.

மேதகு மகா மகோபாத்தியாய பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களைச் செந்தமிழ்த் தெய்வமாகப் போற்றிய பெருமை நம் சபைத் தலைவர் கட்கே உரித்தானது. அவர்கள் சைவத்தையும் தமிழையும் போற்றிய தோடன்றித் தமிழ்ப் புலவர்களையும் போற்றினர். அத்தகையார் வழித் தோன்றல்கள் அனைவரும் வாழையடி வாழையாக வாழ வாழ்த்துகின்றேன். வாழ்க சபைத் தலைவர்கள். வளர்க சன்மார்க்க சபை.

வெ. வெங்கடராமன்
ஆசிரியர், வேந்தன்பட்டி.

பண்டித மணியும் சபையும்

டாக்டர். வ. சுப. மாணிக்கனார்

முதல்வர், டாக்டர் அழகப்ப செட்டியார் கலைக்கல்லூரி

காரைக்குடி

மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் சன்மார்க்க சபை என்ற தமிழ் நிறுவனம் தோன்றுவதற்குக் காரண விளக்காக இருந்தவர்கள்; சபையைத் தோற்றிய திரு. பழநியப்ப செட்டியார், அவர் தம் இளவல் அண்ணாமலை செட்டியார் இருவரோடும் உறவு முறையிலும் புலமைத்துறையிலும் நெருங்கிப் பழகியவர்கள்; அரசஞ் சண்முகனார் முதலான பெரும் புலவர் பலரைச் சபைக்கு ஆண்டுதோறும் அழைத்து அறிவு பரப்பியவர்கள்; சபையின் விழாவிலும் கூட்டங்களிலும் ஒன்றாய் உடனாய்க் கலந்து கொண்டவர்கள்; சுக்கிர நீதி, மண்ணியல் சிறுதேர், உதயணசரிதம், சுலோசனை முதலான நூலாக்கங்களைச் சபை வெளியீடாக அருளியவர்கள்; தம் செல்வாக்கினால் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைப்பாகக் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி கண்டவர்கள்; பண்டிதர்களும் வித்வான்களும் சபையின் வழி நூற்றுக் கணக்காகத் தோன்ற வழிவகுத்தவர்கள். இங்ஙனம் சபையின் தோற்றம், புலவர் கூட்டுறவு, நூற்பணி, கல்விப்பணி எனப் பல வளர்ச்சிக்கும் காரணராக இருந்தமையால் சன்மார்க்க சபையைப் 'பண்டித மணி சபை' என்று அழைக்கலாம்.

பண்டிதமணி பெரும்புலவர்களோடு அளவளாவி உரம் பெறுதற்கு நன்னிலமாகத் திகழ்ந்தது சபை; அன்னார்தம் வடமொழிக் கல்விக்கும் வடமொழி நூலாக்கங்கட்கும் பொருளும் ஆளும் உதவியது சபை; பண்டிதமணியின் இலக்கிய நயங்களைப் புலவருலகம் கேட்டு இன்புறுமாறு மேடையாக விளங்கியது சபை; அன்னார் தம் நூல்களைத் தக்கவர்களின் மதிப்புரைகளோடு பதிப்பித்து உலகிற்கு வெளியாக்கியது சபை; "வேந்தன்கண் ஊறெய்தி உள்ளப் படும்" என்றபடி பல்கலைக்கழகம் கண்ட அண்ணாமலையரசர் பண்டித மணியாரைப் பல்கலைக் கழகத்திற்கு அழைப்பதற்கு அறிமுகம் தந்தது சபை; பொருட்செல்வர் நிறைந்த நகரத்தார் குலத்தில் ஒரு தமிழ்ச்செல்வர் உளர் என்று குல விளக்கை மலைவிளக்காக இலங்கச் செய்தது சபை. மகிபாலநகர்க் கதிரேசனார்க்கு "பண்டிதமணி" என்ற உலகுபுகழ்பட்டத்தை மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.

சா. அவர்கள் தலைமையில் வெள்ளி விழாவில் வழங்கியது சபை. இப் பெருமகனாரின் சொற்பணி, எழுத்துப்பணி, இலக்கியப் பணி, புகழ்ச் செல்வம் என்றின்ன வளர்ச்சிகளுக்கு நிலைக்களமாக நின்றமையின் பண்டிதமணியவர்களை, 'சபைப் பண்டிதமணி' என்றும் அழைக்கலாம். பண்டிதமணி சபை என்றோ சபைப் பண்டிதமணி என்றோ எவ்வாறு அழைத்தாலும், மலர்மணம், மணமலர் போலப் பிரிக்க இயலாதவை என்பது தெளிவு.

பண்டிதமணியின் வளர்ச்சியும் சபையின் வளர்ச்சியும் முன்னும் ஒன்றிவளர்ந்தவை, இன்றும் ஒன்றி வளர்பவை. பண்டிதமணியின் மக்கள் தந்தைபோல் சபை முன்னேற்றத்தில் கருத்துடையோர் ஆதலின் திருவாசக உரை முதலான வெளியீடுகளைக்கூடச் சபைக்கு உரிமையாக வழங்கியுள்ளனர். இவை பொது மக்கட்கு இடையறாது கிடைக்குமாறு சபை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. இதனால் பண்டிதமணியின் பெருமையும் சபையின் பெருமையும் இணைந்து பரவுகின்றன. மேலும் இந்நூல்கள் சபைக்கு முதலாக அமைந்து, வருவாய் தந்து கொண்டிருக்கின்றன. "தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச் சங்கரா யார் கொலோ சதுரர்" இவ்வகையில் பண்டிதமணி குடும்பத்தார் சபையை வழி வழி போற்றி வருப.

பண்டிதமணிப் பட்டத்தை என் ஆசிரியர் எவ்வளவு போற்றினார் என்பதற்கு ஒரு நிகழ்ச்சி. இந்திய அரசுத் தலைவர் வைசிராய் 'மகாமகோபாத்தியாய' என்ற பட்டத்தை வழங்கியபோது சான்றிதழ் ஒன்று அளித்தனர். அவ்விதழில், 'மகிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாருக்கு மகாமகோபாத்தியாய பட்டம் வழங்கப்பெற்றது' என்ற வாசகம் இருந்தது. இதனைப் படித்த புலவர் பெருமானார்க்கு அளப்பரிய மகிழ்ச்சி. அரசிதழ், சபை வழங்கிய பண்டிதமணிப் பட்டத்தையும் ஒப்புக்கொண்டிருக்கின்றதன்றோ? தாய் பண்டிதமணி மகாமகோபாத்தியாய என்னும் மகவை ஈன்றாள். சபையின் பட்டம் அரசுமுத்திரை தாங்கியது கண்டும், பண்டிதமணி என்ற பட்டம் இயற்பெயர் போலத் தமக்கு வழக்காயினதை இவ்விதழ் காட்டுவது காட்டும் என ஆசிரியர் பெரு மகிழ்வு எய்தினர்.

★

வழிவழி வாழ்க!

வித்துவான் க. சங்கர நாராயண பிள்ளை அவர்கள்

(முன்னாள் தமிழ் விரிவுரையாளர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி)

பரந்த இவ்வுலகத்தில் பண்புகளால் சிறந்து விளங்குவது பாரத நாடு. இதனுள்ளும் எல்லா வகையிலும் ஏற்றம் பெற்றுத் திகழ்வது தமிழ் நாடாகும். இத்தமிழ் நாட்டின் ஒரு பகுதியே தனவணிகர் என்ற நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் வாழும் நன்னாடு. பண்டு இப்பகுதி நீர்வளம் நிலவளம் அற்றுக் கள்ளிக் காடாக விளங்கியது. இதனை:—காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி வீடு கட்டிக் கொண்டிருக்கும் வேல் வணிகர் என்ற புலவர் பாடுவார் முத்தப்ப செட்டியாரவர்கள் வாக்கால் அறியலாம்.

தனவணிகர்கள் சோழ அரசர்கட்கு முடிசூட்டும் பெருமை வாய்ந்தவர்கள். அவர்கட்கும் சோழ அரசருக்கும் ஏற்பட்ட மனத்தாங்கலில் அந்நாட்டை விட்டுப் பாண்டி நாட்டைச் சேர்ந்த மேற்கூறிய நிலப்பகுதியிற் குடியேறினார்கள். இவர்கள் 9 பிரிவினராக விளங்கினார்கள். பாண்டியரிடம் 9 ஊர்க் கோவில்களைப் பெற்று அதனையே தங்கள் பெரும் பிரிவுப் பெயர்களாக அமைத்துக் கொண்டார்கள். வளமற்ற நிலத்தில் குடியேறினாலும் முயற்சி திருவினை ஆக்கும் என்ற பொய்யா மொழிக்கேற்பக் கொண்டும் கொடுத்தும் பொருள் திரட்டினார்கள். இலங்கை, பர்மா மலேயா முதலிய வெளிநாடுகளில் சென்றும் பொருள் திரட்டிப் பெருஞ்செல்வர்கள் ஆனார்கள். பொருள் திரட்டும் பொழுதே வருவாயில் அறத்திற்கென்று ஒரு பகுதியை ஒதுக்கி வளர்க்கும் சிறப்புடையவர்கள். இவ்வாறு தாங்கள் தேடிய பொருள்களைக் கொண்டு தாங்கள் குடியேறிய கூரைவீடுகளைக் கொண்ட சிற்றூர்களில் கோவில்கள் குளங்கள் மாட மாளிகைகள் அமைத்தார்கள். அதனால் கள்ளிக் காட்டில் திகழ்ந்த சிற்றூர்கள் எல்லாம் பேரூர்களாகக் காட்சி தருவனவாயின. இவர்கள் தங்கள் தங்கள் ஊர்களில் மட்டும் அன்றிப் பிற இடங்களில் மூவேந்தர்களால் அமைக்கப்பெற்ற பழம் பெருங் கோயில்களையும் வனப்பு மிக்க முறையில் புதுப்பித்துப் புகழ் பெற்றிருக்கிறார்கள். ஆங்காங்கே குளங்கள் நந்தவனங்கள் பசுமடங்

கள் முதலியன அமைத்தும் புகழ் பூண்டிருக்கிறார்.

மேற்கூறிய புகழ் வாய்ந்த தன வணிகர் வாழும் நாட்டில் உள்ள ஊர்களில் ஒன்று மேலைச்சிவபுரி. "சிவ சிவ என்கிலர் (காரணம்) தீவினையாளர் சிவ சிவ என்றிடத் தீவினை மாளும் என்றார் திருமூல தேவர். இயல்பாகவே சிவ என்ற திருநாமம் அமைந்தது இவ்வூர்க்கோர் பெருஞ்சிறப்பாகும். மேலும் சன்மார்க்கசபை அமைந்தது இவ்வூருக்கும் தனவணிகர் நாட்டிற்கும் பெரும் பெருஞ்சிறப்பாகும். ஏன் எனில் தனவணிகர் கல்வி நிலையங்கள் அமைக்க முன் மாதிரியாக அமைந்த காரணத்தால் இவ்வூரில் திகழும் செல்வர்களில் வ. பழ. குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மூவராவர். அவருள் முதல்வர் வ.பழ.சா. குடும்பத்தாராவர். மற்றையோர் வ பழ வ, வ பழ கரு. குடும்பத்தினர்: "பயன் மரம் உள்ளூர்ப் பழுத்ததென்பர் ஊருக்குதவும் செல்வரை" வள்ளுவப் பெருந்தகையார். அவர் வாக்கிற்கிலக்காக ஊருணி அமைத்தல் அஞ்சல் நிலையம் அமைத்தல் போன்ற நற்செயல்களால் செல்வப் பயன் பெற்றவர்கள் இக் குடும்பத்தாராவர்.

இவர்களுள் முதல்வரான சாமிநாத செட்டியாரவர்கட்குப் பூமி செய்த தவத்தாலோ புலவர்கள் செய்த தவத்தாலோ நற்புதல்வர்கள் இருவர் தோன்றினர். இளங்கோவும் செங்குட்டுவனும் போன்றும் இராமனும் இலக்குவனும் போன்றும் பண்புசால் உடன் பிறப்பாளர் ஆனார்கள். மரபிற்கேற்பப் பொருள் திரட்டினார்கள். தாம் திரட்டிய பொருளினை நாள் தோறும் ஏழைகட்கும் புலவர்கட்கும் வழங்கிப் புலவர்களின் பொருள் உரைகளைக் கேட்டுத் திளைப்பவர்கள் ஆனார்கள். அவ்வுணர்வே பூமியும் புலவர்களும் செய்த தவப் பேறாயிற்று. அதனாலே சைவமும் தமிழும் வளர்க்கும் சன்மார்க்க சபை தோன்றுவதாயிற்று. நாடெங்கணும் புலவர் மணங்கமழ்வதாயிற்று. அவ்விருவருள் முதல்வர் திரு பழநியப்ப செட்டியார்கள் ஆவார்கள். அவர்களே சன்மார்க்க சபையைத் தோற்றுவித்து வளர்த்த முதல்வராவார்கள். இளவல் திரு. அண்ணாமலை செட்டியாரவர்கள். இவர்கள் சபையின் இரண்டாவது தலைவராக விளங்கிச் சபைக்கு மூலதனம் சேர்த்து வைத்துக் காத்து விளங்கினார்கள். பொன்னமராவதியிலிருந்து மேலைச்சிவபுரிக்குச் சாலை அமைத்தவர்களும் அண்ணாமலைச் செட்டியாரவர்களே ஆவார்கள். சபையின் மூன்றாவது தலைவராக விளங்கியவர்கள் திரு. பழநியப்ப செட்டியாரவர்களின் முதற் புதல்வரான திரு ப. சா. சாமிநாதன் செட்டியாரவர்கள் ஆவார்கள். இவர்கள் கொழும்பில் ஆங்கிலம் கற்றுத் தேறியவர்கள். ஆங்கிலப் புலமையும் தமிழ்ப்புலமையும் மிக்கவர்கள். தேவாரம் திருவாசகம் திருக்குறள் முதலிய நூல்களில் மிக்க பயிற்சி உடையவர்கள் இந்நூல்களில் குறிப்பிட்ட இடங்களைக் கூறிவிளக்கும் ஆற்றல் பெற்றவர்கள். வையகம் போற்றும் வாக்குறுதி பெற்றவர்கள். நுணுகி ஆய்ந்து செயல்புரியும் திடம் பெற்றவர்கள். காலத்தைக் கண்ணெனப் போற்றிக் கடமையைத் தவறாது புரிபவர்கள். செந்நெறிச் செம்மலாக விளங்கியவர்கள். சபையை நன்முறையிற் பேணி வளர்த்தவர்கள். கல்லூரியை ஆக்கந்தரும் முறைமையொடு வளரச் செய்தவர்கள். புலவர்கள் செல்வாக்குப் பெறக் கல்லூரியைப் பல்கலைக்கழகத்துடன் இணைத்தவர்கள். இறைபணியில் சற்றும்

இளைப்புக் கொள்ளாதவர்கள். சைவம் வளர உலகம் வாழும் என்னும் உண்மையில் மிக்க ஊற்றம் உடையவர்கள். அதனால் சபைக்கண்ணே சிவபூசை விழாவை அமைத்துத் தாம் சிவபூசைச் செல்வராம் பேறுபெற்றதோடு அவ்விருப்பினைக் கொண்டார் பலரையும் அப்பேறு பெறச் செய்தவர்கள். தம்காலத்திலேயே இளவல் திரு சிதம்பரனார் அவர்களைச் சபைக்குத் துணைத்தலைவராக்கி அவர்கள் ஆற்றல் கண்டு உவகை பூத்தவர்கள். தம்போல் எல்லா நற்குணங்களும் செயலாற்றும் திறமும் கொண்ட திரு ப.சா. பழநியப்ப செட்டியார் புலவர் திரு. அழகப்ப செட்டியார் திரு சுந்தரஞ் செட்டியார் திரு. சிங்காரம் செட்டியார் செல்வி இராசாமணி அம்மையார் செல்வி பாப்பா அம்மையாராகிய நன்மக்கட் பேற்றினைப் பெற்றவர்கள், வாழ்க சாமிநாத நற்பெயர்: வளர்க அவர்களின் தொண்டு நெறி. வழிவழி சிறக்க அவர்களின் நற்குலம். திருவருள் முன்னிற்க.

அடுத்த இதழில் ... ...

... ... இரண்டு டாக்டர்கள்

ஒருவர்

டாக்டர் மெ. சுந்தரம்

தமிழ்த் துறைத் தலைவர்,
மாநிலக் கல்லூரி, சென்னை.

மற்றொருவர்

தமிழண்ணல் இராம. பெரிய கருப்பன்

தமிழ் விரிவுரையாளர்
தியாகராசர் கல்லூரி, மதுரை.

இவர்களைப் பற்றிய விவரங்கள் இடம் பெறுகின்றன. இரு டாக்டர்களும் சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அறுபதாண்டு ஆலமரம்

புலவர் வெ. சு. அழகப்பனுர் எம். ஓ. எல்.
முதல்வர் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி

முன்னுரை

வண்புகழ்ப் பாரி வாழ்ந்த பகுதி பறம்புமலை. பாரிமகளிரும் கபிலரும் பைந்தமிழ் பாடி மகிழ்ந்த இடம் பறம்புமலை. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழோசை முழங்கிய இடம் பறம்புமலை. இன்றும் இங்கு தமிழோசை கேட்கிறது. இந்த இடத்தைச் சார்ந்ததே மேலைச் சிவபுரி. இங்கு சங்கச் சான்றோர் வளர்த்த செந்தமிழ், தேனெனப் பெருக்கெடுத்து நாடெல்லாம் பரவ நல்ல தொண்டு நடந்து கொண்டிருக்கிறது ஆம் இங்கே தான் சன்மார்க்க சபையின் உறுப்பான கணேசர் செந்தமிழ்க் கல்லூரி என்னும் 60 ஆண்டு ஆலமரம் தண்ணிழல் பரப்பித் தமிழ்ப் புலவோருக்கு நீழல் தந்து இயங்குகின்றது. மேலைச்சிவபுரி வ.பழ.சா. குடும்பத்தினர் இதனை 60 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவித்தனர். தோற்றுவித்தவர்கள் அண்ணல் பழநியப்பரும் இளவல் அண்ணுமலையாரும்ஆவர். தோன்றத்தூண்டியவர் புலவர்மாமணி நகரத்தார் பெருமணி பண்டிதமணி கதிரேசச் செட்டியார் ஆவர். சன்மார்க்க சபையும், கல்லூரியும் தக்கார் கைபட்ட காரணத்தால் இச் சிற்றூரில் வான் சிறிதாய்ப் போர்க்கும் வகையில் இன்று வளர்ந் தோங்கிப் பொலிகிறது.

தொடக்க நிலை

சபை தொடங்கிய காலம் முதல் (1909) தனித் தமிழ் வளர்ச்சிக்குழு பாடுபட்டு வந்திருக்கிறது. தானே ஒரு பாடத்திட்டத்தை வகுத்து சிற்றிலக்கண இலக்கியங்களை நடத்தி வந்தது. முதன் முதலாசிரியர் ப. சிங்காரவேல் பிள்ளை ஆவர். காலநிலையை அனுசரித்து 1918ஆம்ஆண்டு முதல்மதுரைத் தமிழ்ச் சங்கத்து, பிரவேச பண்டித பாலபண்டிதத் தேர்வுகளுக்கு மாணவர்களை அனுப்பியது. நிலவளத்திற் கேற்பப் பயிர் வளம் சிறப்பது போல நல்லாசிரியரைப் பெற்ற இக்கல்லூரி மாணவர்கள் இத்தேர்வுகளில் பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்றனர். அன்று இங்குப் பயின்றவர் எல்லாம் இருகை விரல் எண்ணிக்கையினரே எனலாம்.

இடைக்கால நிலை

1931 லேயே சபையார்க்குப் பல்கலைக் கழகத்தோடு இணைந்த தனித் தமிழ்க் கல்லூரி நிறுவும் எண்ணம் மலர்ந்தது. பண்டிதமணியாரின் அறிவுரைப்படி அந்நாள் சபைத்தலைவர் ப. சாமிநாதன் செட்டியாரவர்கள் 1938-ல் இக்கல்லூரியை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெறச் செய்தனர். 50 ஆண்டு

கட்கு முன்னரே மாணவர்களின் உணவிற்காக உதவித் தொகை வழங்கியது. தங்கிப்படிக்க இட வசதி செய்து கொடுத்தது. இவ் வளவு வசதிகள் செய்து கொடுத் தும் மாணவர்கள் தமிழ்நூல் பயில ஆர்வம் காட்டவில்லை. பின் னர் ஊர்கள் தோறும் பள்ளிகள் எழுந்ததும் தமிழாசிரியர் தேவை மிகுந்தது. தமிழ்க் கல்லூரியினை மாணவ உலகம் நாடத் தொடங் கியது. இக்கல்லூரிகளில் மாணவர் தொகை பெருகியது: தேவைகள் வளர்ந்தன.

இன்றைய வளர்ச்சி

இக்கல்லூரி ஆதியிலிருந்தே புலமைத் திறமிக்க ஆசிரியர் களையே அமர்த்திக் கொண்டது. நாட்டின் நாலா பக்கங்களிருந் தும் மாணவர் வருவாராயினர். இங்கே பயின்றவர்கள் அழுத்த மான தமிழ்ப் புலமை பெற்றனர். மாணவர்களின் வசதிகளைக் கருத் திற் கொண்டு புதிய கட்டிடங்கள் உருவாயின.

(1) எழிலாரும் வகுப் பறை கள் நான்கு கொண்ட சாமிநாத நிலயம் 6-9-68ல் ரூ 61000 செல வில் கட்டி முடிக்கப் பெற்றது. முன்னால் சபைத்தலைவர் வ. பழ. சாமிநாதன் செட்டியார் மைந்தர் கள் ரூ 20000 நன்கொடை வழங்கினர். சன்மார்க்க சபை இதற்கு ரூ 41000 செலவு செய் தது.

(2) நாகப்பா மாணவர் விடுதி ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்து 28-8-66 இல் கட்டிமுடிக் கப் பெற்றது. 80 மாணவர் களுக்கு மேல் தங்க இங்கு வசதி யுண்டு. இது இந்நாளைய வசதி களைக் கொண்ட வனப்புமிக்க சிறப்பான கட்டிடமாகும். இதனை நன்கொடையாக வழங்கியவர் இந்நகர்ச் செல்வரும், கல்லூரித் தலைவரும், சன்மார்க்க சபைச் செயலருமான திரு. ஆ. நாகப்பச் செட்டியாரவர்கள் ஆவார்கள்.

(3) சபையின் முன் மண்டபம் புதி தாக அமைத்துப் பெரிதாகக் கட் டப் பெற்றது. மிகுதியான மாண வர் சேர்ந்தமையால் இங்கு தங்கு வாராயினர். இது இளங்கோ இல் லம் என அழைக்கப் பெற்றது. முன் மண்டபம் கட்ட ரூ 8170 செலவாயிற்று. 40 மாணவர்கள் தங்க வசதி உண்டு ஆக 120 மாணவர்கட்கு இக்கல்லூரியில் விடுதி வசதி உண்டு.

(4) பொன் விழாவின் போது (1960) பயின்ற மாணவர்களின் எண்ணிக்கையைப் போல் இன்று மாணவர்களின் தொகை நான்கு மடங்கு பெருகியுள்ளது. இன்று பயில்வோரின் தொகை 219. மக ளிர் மட்டுமே 50 பேர் பயில்கின்ற னர். கலைக் கல்லூரிக்கு உள்ள விடுதி வசதி, உணவு வசதி, வகுப் பறை வசதி, நூலக வசதி ஆகிய பல்வகை வசதிகள் இக்கல்லூரிக்கு வாய்த்திருப்பதை நேரில் பார்த்த பெரியோர்கள் பாராட்டிக் கூறு கின்றனர். இன்றுள்ள தமிழ்க் கல் லூரி பதின்மூன்கினுள் இக்கல் லூரியே இரண்டாவது தோன்றிய தொன்மையது எனினும் வசதி களை நோக்கும்போது இதுவே முதன்மையானது எனலாம்.

இன்று காக்கும் திருவாளர்கள்

சபைத்தலைவரும் இக்கல்லூரி நடைமுறைச் செயலருமான திரு. பழ. சிதம்பரம் செட்டியாரவர் கள் இக்கல்லூரியைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வளர்த்து வருகிறார்கள். இவர்களும் டாக்ட வ சுப. மாணிக்கனாரும் அரிதின் முயன்று பொருள் வளம்

கொழிக்க வழி கோலினர். திருவாளர்கள் ஆ. நாகப்பச் செட்டியாரவர்கள், டாக்டர் வ, சுப. மாணிக்கம் அவர்கள், சி. இராம. இராம சாமிச் செட்டியாரவர்கள், பண்டிதமணி மெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கள் ப.சா. பழநிழப்பச் செட்டியாரவர்கள் (துணைநடைமுறைச் செயலர்)முதலான இப்பெருமக்கள் கல்லூரிக் குழுவினராக அமைந்து இக்கல்லூரியாம் ஆலமரம் ஒங்கி வளர உரமிட்டு நீர்பாய்ச்சி வளர்த்து வருகின்றனர். மற்றும் வ. பழ. குடும்பத்தினர் இதன் வளர்ச்சியில் பெரிதும் நாட்டம் கொண்டு உதவி வருகின்றனர்.

ஆசிரியர்கள்

புலமை நலம் சான்ற பெரியோர்களே இதன் ஆசிரியர்களாக விளங்கி உள்ளனர். ஆ. பூவராகம் பிள்ளையவர்கள், மு. அருணாசலப் பிள்ளையவர்கள், மீ. முத்துசாமிப் பிள்ளையவர்கள், ஆ. வ. இராமநாதன் செட்டியார் அவர்கள், டாக்டர் க. ஆறுமுகனாரவர்கள், டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்கள் ஆகிய பெரும் புலவர்கள் இங்கு முதல்வர்களாக விளங்கியிருக்கிறார்கள். இவர்களில் பலர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தே பேராசிரியர்களாக விளங்கியவர்கள் ஆவர். அங்குப்பயின்ற மாணவரே இங்கு முதல்வராய் அமைதல் ஒரு மரபுச் சிறப்பாகும்.

நகரத்தாரில் புலவர் பட்டம் பெற்ற தகுதிவாய்ந்தோரைசபை, கல்லூரியில் ஆசிரியராக நியமித்து ஆதரவு தந்து வருகிறது. மேலைச் சிவபுரிப் புலவர் ப. சா.அழகப்பன் அவர்கள், வேந்தன்பட்டி புலவர் சோம அழகப்பன் அவர்கள், புலவர் நா. மலையாண்டி அவர்கள் இவ்விதம் ஆசிரியர் வேகுப்பட்டி புலவர் நாகசண்முகம் முதலானோர் இங்கு முன்னாளில் ஆசிரியராகப் பணி செய்தோராவர். இவர்கள் சன்மார்க்கசபையின் பழைய மாணவரும் ஆவர். இன்று மேலைச் சிவபுரி புலவர் செல்வி. இராமாயி ஆசிரியராகப் பணிபுரிகிறார். பெண்ணாயினும் தக்கவராயின் சபை பேணும் என்பதற்கு இஃதோர் காட்டாகும். இயன்ற அளவு நகரத்தார்க்கு இது உரிய வகையில் துணை புரிந்து வருகிறது.

இன்று திருவாளர்கள் வித்துவான் R. சோமசுந்தரனார், வித்துவான் மு. கோவிந்தராசனார், வித்துவான் மு. இராமலிங்கனார் B.A. முதலிய ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

இச்சபையின் தொன்மையினையும், தொண்டினையும் எண்ணி தமிழகத்துப் பெரு நிறுவனங்கள் தமது மரியாதைப் பங்கினை மனமார செலுத்தியுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கல்விக் குழு, சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு, தமிழகப் புலவர்குழு ஆகியவற்றில் யான் உறுப்பினனாக விளங்கி தொண்டுபுரியும் வாய்ப்பினைப்பெற்றுள்ளதே இதற்கோர் சான்றாகும்.

கல்லூரி தந்த மாணவச் செல்வம்

இக்கல்லூரியில் இதுவரை பயின்றோர் சுமார் 1000 பேர் ஆவர். இவருள் கவிஞர்கள் பாடலாசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், அறிவுத்துறையில் டாக்டர் பட்டம் பெற்றோர், வணிகத்துறையில் மேம்பட்டு விளங்குவோர் என்ற இன்ன பெருமைக்குரியோர் பலர் இக்

கல்லூரியின் பழைய மாணவர்களாவர். இவர்களின் பெயர், களைக் கூறி விரிப்பின் அகலும், தொகுப்பின் எஞ்சும்.

பாடலாசிரியராகவும், கதாசிரியராகவும், நூலாசிரியராகவும் நூல்வெளியீட்டாளராகவும், இவ் இதழாசிரியராகவும் விளங்கும் புலவர் திரு. நாகசண்முகம் அவர்கள் இக்கல்லூரியின் பழைய மாணவரும் ஆசிரியரும் ஆவார். இவர்போல மிகப்பலர் பலதுறைகளில் மேம்பட்டுச் சிறந்து விளங்குகின்றனர்.

வித்துவான் தேர்வில் மாநில முதல் மாணவர்களாக 1948, 1969-ஆகிய ஆண்டுகளில் தேறி ஐந்தாம் ஜார்ஜ் நினைவுப் பரிசு ரூ 1000-ஐ பெற்ற மாணவச் செல்வங்களும் இங்கு உண்டு.

தனித்தன்மை

இது வெள்ளிவிழா, பொன் விழா, வைரவிழா முதலான சீரிய விழாக்களை முறையே செய்த சிறப்பினது. மாணவர்க்கு மிக்க வசதிகளை உடைய விடுதியைக் கொண்டது. சிக்கனமாக செலவு செய்ய ஏற்ற இடமாய் இருப்பது சிறந்த நூலகத்தைக் கொண்டிருப்பது. அரசினர் வழங்கும் மாணவர் உதவித் தொகையை முறையாக முயன்று பெற்று மிகுதியானவர்கட்குக் கிடைக்கச் செய்வது. நூற்றுக்கு நூறு மாணவர் தேர்ச்சிபெற சிறந்தவகையில் கற்பிப்பது. முதல் மாணவராய்த் தேர்ச்சி பெறுவோருக்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அரிய பரிசுகளை வழங்குவது. எதிர்காலத்தில் மாணவியருக்குத் தனி விடுதி வசதி செய்ய வேண்டுமென்னும் திட்டத்தைக் கொண்டுள்ளது.

இத்தகு சிறப்பும் பெருமையும் மிக்க கணேசர் செந்தமிழ்க் கல்லூரி தமிழ் வரலாற்று நெடுஞ்சாலையில் அறுபதாண்டு ஆலமரமாய் விளங்கி நிழல் பரப்பி வருகின்றது. இன்னும் பலவகை வளர்ச்சிகளையும் வளங்களையும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டாய் நிழல்பரப்பி விளங்குமென்பது உறுதி.

சன்மார்க்க சபை வாழ்க!

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
வாழ்க!

தமிழணங்கு நீடூழி வாழ்க.

ஃ ஃ ஃ

வல்லோராம் புலவர்பலர்
வடிவாக்கித் தருகின்ற
கல்லூரி கணேசர் செந்தமிழ்க்
கல்லூரி வாழ்கவே!


பழனிமலைக்
காவடி
புலவர் நாகசண்முகம்

3. என்ன சொல்வது? எப்படிச் சொல்வது?

இயற்கையாக மணமுள்ள மலர்களே எல்லையில்லாத பெருமைக்கு உரியவையாகின்றன.

ரோஜா மலருக்கும் மல்லிகை மலருக்கும் யார் மணத்தை ஊட்டுகிறார்கள்? அப்படி ஊட்டுவது என்பது நிலையாக இருந்திருக்குமானால் மணம் சேர்ப்பவர்களின் நிலையைப் பொறுத்து, கூடியும் குறைந்தும் இயற்கைத் தன்மை அற்றுப் போயிருக்கும். தங்கள் மெல்லிய இனிய மணத்தால் அனைவரையும் கவர்கின்ற தன்மையை மலர்கள் இழந்து, செயற்கைத் தன்மைக்கு அடிமைப்பட்டுச் சிறப்பினை இழந்திருக்கும்.

பாச உணர்ச்சி, தூய இனிய மலரைப் போன்றது. இயல்பாக உள்ள பாச உணர்ச்சிக்கு இந்த உலகில் ஈடு இணையில்லை அது கல்லையும் கனியாக்கக்கூடியது, புல்லையும் மரமாக்க வல்லது.

இராமநாதன் செட்டியார் 'சீதை' என்று அழைக்கின்ற குரலிலேயே பாசம் விரவிக் கிடக்கும்.

அன்று அவர்கள் அழைத்தபோது பாசத்தோடு சற்றுப் பரபரப்பும் கலந்திருந்தது. வீணையின் நாதத்தில் சிறு மாற்றம் என்றாலும் கலைவாணிக்குத் தெரியாமல் போய்விடுமா? இராமநாதன் செட்டியார் குரலில் விரவியிருந்த சிறு பரபரப்பைக் கூட சீதை ஆச்சி உணர்ந்தார்கள்.

"இந்தா வாரேன்..." என்று குரல் கொடுத்துக் கொண்டே ஹாலுக்கு வந்து சேர்ந்தார்கள். கணவர் அருகில் சென்று, "என்ன?" என்று கேட்டார்கள்.

ஆச்சியின் முகத்தை ஒரு முறை ஏறெடுத்துப் பார்த்த செட்டியார் உட்காரும்படி கூறினார்கள். ஆச்சி சற்றுத் தள்ளி அமர்ந்தார்கள்.

அவர்கள் இருவரும் தனியாக இருக்கின்ற பொழுதும் குழந்தைகள் இருக்கின்ற பொழுதும்கூட, அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். எல்லாரும் சந்திக்கிற பொழுது பையன் வேலாயுதமும் பெண் கல்யாணியும்கூட, பக்கத்துச் சோபாக்களில் அமர்ந்து கொள்வார்கள்.

மரியாதை என்பதற்குத் தம் இளமைக் காலம் முதலே' எல்லைக் கோடுகள் இருந்தால் போதும்; வேலிகள் தேவையில்லை' என்று நினைப்பவர்கள், இராமநாதன் செட்டியார் அவர்கள்!

"ஒரு முக்கியமான விஷயமாக பேசறதுக்காக உன்னைக் கூப்பிட்டேன்." இதைக் கூறியபொழுது இராமநாதன் செட்டியார் குரலில் சற்று பரபரப்புக் கூடியிருந்தது.

"ரொம்ப முக்கியமான விசயம்னு நினைக்கிறேன். ஏன்னா, என்னிக்குமில்லாம இன்னைக்கு நீங்க கொஞ்சம் பரபரப்பா இருக்கிறீங்க."

சீதை ஆச்சி இப்படிக் கூறியதும் இராமநாதன் செட்டியார் மெல்லச் சிரித்து விட்டார்கள்.

"அருணுசல ஐயா, காசிக்குக் கல்யாணம் சொல்றதைப் பத்திக் கேட்டாங்க. மாமக்காரன் இல்லாமக் கல்யாணம் பண்ணினேம்ங்கிற பேரு வரப்படாதுன்னும் சொன்னுங்க."

இதைக் கேட்டதும் சீதை ஆச்சியின் மலர் முகம் சிவக்கத் தொடங்கியது. பொங்கி வந்த ஆத்திர உணர்ச்சியை அடக்கிக் கொண்டார்கள்.

"இன்னும் என்ன சொன்னுங்க?"

சீதை ஆச்சியின் கேள்வி இராமநாதன் செட்டியாருக்கு வியப்பைத் தந்தது.

"என்ன சீதை இப்படிக் கேட்கிறே?"

"நான் சாதாரணமாத்தான் கேட்கிறேன். ஐயா கேட்டதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"நான் ஒண்ணும் சொல்லலே. நாம கலந்துக்கிட்டு அப்புறம் சொல்லலாம்னு விட்டுட்டேன்."

"அப்போ, இது கலந்து சொல்ல வேண்டிய விசயந்தான்னு நினைச்சிருக்கீங்க?"

சீதை ஆச்சியின் கேள்வி இராமநாதன் செட்டியாருக்கு இடக்காகத் தோன்றியது. என்றாலும் அதை அவர்கள் அப்படி எடுத்துக் கொள்ளவில்லை. 'கடந்த இருபத்திரண்டாண்டுக் கால வாழ்க்கையில் ஒருமுறை கூட, சீதை இப்படிக் கேட்டதில்லையே! இன்று ஏன் இப்படிக் கேட்கிருள்?' என்று அவர்கள் யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

அக உணர்ச்சிகளை முகம் காட்டுமல்லவா? செட்டியார் அவர்களுடைய உணர்ச்சிகளை ஆச்சி புரிந்து கொண்டார்கள்.

"நான் ஒண்ணும் தப்பாக் கேக்கலே. ஐயாகிட்டே நீங்களே இதுக்கு முடிவு சொல்லியிருக்கலாமே, அப்படீங்கிறதைத் தான் சொன்னேன். நமக்குக் கல்யாணம் ஆனதிலே யிருந்து இன்னிக்கு வரையிலே நான் நீங்க சொன்னதுக்குத் தடுத்து மறுத்து ஒரு வார்த்தை சொன்னதில்லே. அப்படி நம்ம வீட்டிலே என்ன நடந்திருக்கு"

"இதெல்லாம் ஏன் சீதை பேசறே?"

"இன்னிக்கும் உங்களை மறுத்து நான் சொன்னேன் அப்படீங்கிற நிலைமை வந்துடப்படாதுங்கிறதுக்காகத்தான் பேசறேன்."

"நீ என்னதான் சொல்றே சீதை?"

"காசிக்குக் கல்யாணம் சொல்லப்படாதுன்னு சொல்றேன்."

உறுதியோடு சீதை ஆச்சி கூறியதைக் கேட்டு ஒரு கணம் இராமநாதன் செட்டியார் அயர்ந்து போய் விட்டார்கள். சிறிது நேரம் அங்கே அமைதி நிலவியது.

அமைதியாக ஆறு ஓடுகின்ற வரை அதற்கு எவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்பது தெரிவதில்லை. பொங்கிப் பெருகிக் கரைமோதி வருகின்ற பொழுது தான் அதன் வன்மை தெரிகிறது.

இரைந்துகூடப்பேசாதசீதை ஆச்சி, முகம் சிவக்க, கண் சிவக்க, உள்ளம் கொதிக்க, உறுதி தொனிக்கக் கூறிய வார்த்தைகளைக் கேட்டபொழுது காசிச் செட்டியார் மீது அவர்களுக்கு எல்லை கடந்த வெறுப்பு இருக்கிறது என்பதை இராமநாதன் செட்டியார் நன்ருகப் புரிந்து கொண்டார். தன் மனைவியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அவர்களுக்கு, சந்திரன் திடீரென்று குங்குமத்தை அள்ளிப் பூசிக் கொண்டதைப் போலத் தோன்றியது.

கணவரிடமிருந்து பதில் ஒன்றும் வராமல் இருக்கவே, தன் கணவர் முகத்தை அவர்கள் பார்த்தார்கள். இந்தச் சூழ்நிலையிலும் கூட அமைதி தவழ வீற்றிருந்த தன் கணவரைப் பார்த்தபோது பெருமிருத்தால் அவர்கள் உள்ளம் நிறைந்தது.

''என்ன பேசாம இருக்கீங்க?'' என்று சீதை ஆச்சி கேட்டார்கள்.

''காலம் எப்படி யெல்லாம் மாறுதுன்னு யோசிச்சிக்கிட்டு இருக்கேன் சீதை. காசி சின்ன வயசா இருந்த போதே உங்க தாயார் இறந்துட்டாங்க நீதான் அவனுக்குத் தாய்க்குத் தாயா இருந்து வளர்த்தே. அவன் கொஞ்சம் பெரிய பையஞ போனதுக்குப் பிறகு கூட, தம்பி தம்பின்னு இழுத்து மடியிலே வச்சிகினு நீ சோறு ஊட்டினது எனக்கு இன்னும் நல்லா நினைவு இருக்கு. பின்னடி உங்க அப்பச்சி காலமாகற போது கூட உன்னைக் கூப்பிட்டுக் காசியை உன் கையிலே பிடிச்சுக் கொடுத்து, 'இவன் உன் பொறுப்பு' அப்படீன்னு சொல்லிட்டுத்தானே செத்தாங்க.''

சீதை ஆச்சி கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வடிந்தது.

''எங்கிட்டே மட்டுந்தான் அப்பச்சி சொன்னுங்களா?''

''இல்லே சீதை, அவன்கிட்டேயும் தான் சொன்னுங்க. இப்படி ஆச்சி, தவம் பண்ணிஞகூட கிடைக்காதுடா, கடைசி வரையிலே அன்போடயும் ஆதரவோடயும் நன்றியோடயும் நடந்துக்கடா அப்படீன்னு சொன்னுங்க.''

''அவன் நடந்துக்கலியே.''

''அஞ்சு விரலும் ஒண்ணுவா இருக்கு?''

''விரல் குட்டையும் உயரமுமா இருந்தாலும் ஒண்ணுக்கு ஒண்ணு எவ்வளவோ உதவியா இருக்கே.''

சீதை ஆச்சியின் உள்ளம் வேதனையின் எல்லையில் சிக்கித் தவிககிறது என்பதைக் கண்டு இராமநாதன் செட்டியார் மிகவும் வேதனை யடைந்தார்கள்.

''சீதை, உலகத்திலே எல்லாரும் நல்லவங்களா இருக்க முடியாது. ஏதோ அவன் குணம் அது. போஞ போருன்னு விட்டுட வேண்டியதுதான். நமக்கு முருகன் கொடுத்தது அவ்வளவுதான், அப்படீன்னு நெனச்சுக்குவோம். இதுக்குப் போய் நீ கவலைப் படாதே. அருணசல ஐயா சொன்னுங்களே அப்படீங்கிறதுக்காக அவனுக்குக் கல்யாணம் சொல்லலாமான்னு கேட்டேன்.''

"கேட்டா என்ன? எனக்கு மட்டும் அவன் கல்யாணத்துக்கு வரணும்னு எண்ணம் இல்லியா? ஒரே ஒரு தம்பி. அவனே வச்சுட்டுக் கல்யாணம் பண்றதுங்கிறது மனசுக்குக் கஷ்டமாதான் இருக்கு. ஆனா, தஞ்சாவூர்லே அவன் கடைசியா நடந்துகிட்டதை என்னாலே மறக்கவே முடியலே."

"சொந்த ஆச்சியா இருந்தும் உருப்பட மாட்டேன்னு சொல்லிட்டியே இனிமேலே நான் உன் முகத்திலே விழிப்பேனா அப்படீன்னு சொல்லிட்டுப் போனானே, அதைச் சொல்றியா?"

"இல்லே, நெருப்புன்னா சுட்டுடுமா? நான் அதைப் பெரிசாவே நினைக்கலே, ஏதோ தொலைஞ்சுட்டுப் போறான். முருகன் நமக்குக் கொடுத்தது அவ்வளவு தான்னு நெனச்சிக்கிட்டுப் போறோம் அப்படீன்னு நீங்க சொன்ன பிறகு அவன் பணத்தை மோசம் பண்ணினது கூட எனக்குப் பெரிசாத் தெரியலே, ஆனா, அவன் எழுந்து போறபோது, நடந்துக்கிட்டதை என்னாலே மறக்க முடியலே."

"என்ன சீதை சொல்றே?"

"பெட்டகத்துச் சாவியை உங்க முன்னாலே வீசி எறிஞ்சிட்டுப் போனானே அதைச் சொல்றேன். பணத்துக்கு உரியவங்க வந்திருக்காங்களே அப்படீங்கிற அச்சம் அவனுக்குக் கொஞ்சம் கூட இல்லே. அது மட்டுமா? வாழ்க்கை பூரா தெய்வம் போல இருந்து உதவி செஞ்ச அய்த்தான் வந்திருக்காங்களே அப்படீங்கிற மட்டு, மரியாதை, பாசம் கொஞ்சம் கூட இல்லே; அப்படி நடந்துக்கிட்டது சரிங்கிற எண்ணத்தோடேயே அவன் நடந்துக்கிட்டான். வெளிச்சத்துக்கு விளக்கைக் கொடுத்தா அதை வைச்சே நம்மை சுட்ட மாதிரி பண்ணிட்டானே? அப்படிப்பட்ட பயலுக்குப் போய்க் கல்யாணத்தைச் சொல்லி, சிபாரிசு வச்சுக் கூட்டிக்கிட்டு வந்தா, அவன் செஞ்சதெல்லாம் நியாயம்னு நாமும் ஒத்துக்கிட்டதா ஆயிடும். ஏதோ, நாம குற்றம் பண்ணினவங்களா ஆயிடுவோம். மோசக்காரன் தான் பெரிய மனுஷன்னு ஆயிடுவான். முருகன் மேலே ஆணையாச் சொல்றேன். நான் செய்தது தப்பு அப்படீன்னு அந்தப் பய உங்ககிட்டே வந்து கேட்டுக்கிற வரையிலே அவன் இந்த வீட்டுப் படி மிதிக்கப் படாது. நமக்குக் கல்யாணம் ஆனதிலேயிருந்து நீங்க என்னை ஒரு குழந்தையைப் போலத்தான் ரொம்ப பாசத்தோட நடத்திக்கிட்டு வர்றீங்க. நான் சொன்னதுகளிலே ஏதாவது தப்பு இருந்தா உங்க குழந்தையா நெனச்சு மறந்துடுங்க", என்று கூறிவிட்டு, சேலைத் தலைப்பால் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டே சீதை ஆச்சி அங்கிருந்து எழுந்து சென்றார்கள்.

கண்களில் படர்ந்த நீரைத் தம் துண்டை எடுத்து இராமநாதன் செட்டியார் அவர்கள் துடைத்துக் கொண்டார்கள். அருணாசல ஐயாவிடம் என்ன சொல்வது என்பது அவர்களுக்கு இப்பொழுது தெளிவாகி விட்டது. ஆனால் பெரியவர்களான அவர்களிடம் எப்படிச் சொல்வது என்பதுதான் அவர்களுக்குச் சற்றுக் குழப்பமாக இருந்தது. அதைப்பற்றி அவர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

4. என்ன தயக்கம்?

திருவிழாவிற்குப் பல நாட்களுக்கு முன்னரே கோயிலில் கனை கட்டிவிடுவது போல இராமநாதன் செட்டியார் விட்டில் ஒரு மாதத்திற்கு முன்னரே கனை கட்டத் தொடங்கியது.

செட்டி நாட்டுக் கல்யாணம் ஒவ்வொன்றுமே ஒரு திருவிழாத்தானே!

செட்டியாருக்கு மலேசியாவில் தோட்டம் இருந்த போது அதில் பணிபுரிந்த பஞ்சநதம் பிள்ளை கல்யாண வேலைகளுக்குத் துணை புரிவதற்காக வந்திருந்தார்.

பழக்காரர், வெற்றிலைக்காரர், லட்டு ஜிலேபிக் காரர், பால்காரர், பூக்காரர், மேளகாரர், பொட்டுச் சப்பிளைக்காரர், வாணக்காரர், லைட்டுக்காரர் கொட்ட கைக்காரர், சமயற்காரர்-என்று ஒவ்வொரு காரர்களாக வந்து வந்து அச்சாரம் பெற்றுச் சென்று கொண்டிருந் தார்கள்.

இரண்டு மூன்று கண்டாங்கிக்காரர்கள் மட்டும் அடிக்கடி வந்து கண்டாங்கி எப்பொழுது கொண்டு வரலாம் என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

கண்டாங்கிக்கு என்ன அவசரம். கல்யாணத்திற்கு ஒரு வாரம் பத்து நாட்களுக்கு முன்னர் எடுத்தால் போதும் என்று இராமநாதன் செட்டியார் நினைத் தார்கள்.

தானுகக் கனிவதைவிடக் கனியவைப்பதுதானே தொழில்.

ஒருநாள் கண்டாங்கிகளோடு, அப்படிச் சொல்ல லாமோ கண்டாங்கிகள் நிறைந்த பெரிய பெரிய டிரங்கு களோடு கண்டாங்கிக்கார ஆறுமுகம் வந்து சேர்ந்தார்.

தம்மோடு துணைக்கு வந்த பையன்களை டிரங்குகளை உள்ளே எடுத்து வருமாறு கூறிவிட்டு அவர் உள்ளே வந்தார். வருகிறபொழுதே துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார். ''என்னையா! கண்டாங்கிகளை யெல்லாம் எடுத்துக்கிணே வந்துட்டியா'' என்று இராம நாதன் செட்டியார் அவரைக் கேட்பதற்கு முன்னரே! ''சித. சுப. கா. விட்டுக் கல்யாணத்துக்கு வந்தேன். முகூர்த்தநாளாச்சேன்னு கண்டாங்கிகளையும் எடுத்துக் கிட்டு வந்தேன். இன்னைக்கு சும்மா பாத்துவைங்க. வேணுங்கிறப்போ எடுத்துக்கலாம்'' ஆறுமுகம் மிகவும் பவ்யமாக, ஆச்சியையும் செட்டியாரையும் பார்த்துக் கூறினுர்.

பணிவும் அன்பும் கலந்த ஆறுமுகத்தின் வேண்டு கோளை இராமநாதன் செட்டியாரால் புறக்கணிக்க முடியவில்லை.

சீதை ஆச்சியை அழைத்துக் கண்டாங்கிகளைப் பார்க்குமாறு கூறினுர்.

உடனே பஞ்சநதம் பிள்ளை இரண்டு பர்மாப் பாய்களை எடுத்து, விரித்தார்.

''ராமாயி அயித்தையைக் கூப்பிட்டா நல்லது''

''கூட்டிகிட்டு வரச் சொன்னுப் போகுது.''

ஆச்சியும் செட்டியாரும் பேசிக் கொண்டிருக்கும் போதே "நான் போய்க் கூட்டிக்கிட்டு வர்றேன்" என்று கூறிவிட்டு பஞ்சநதம் பிள்ளை அங்கிருந்து புறப்பட்டார்.

யார் இந்த ராமாயி அத்தை!

ராமநாதன் செட்டியாரின் சித்தப்பார் மனைவி. சில ஆண்டுகளுக்கு முன்னர் சித்தப்பார் காலமாகி விட்டார்கள். அவர்களுக்கு மூன்று பையன்கள் ஒரு பெண். எல்லாருக்கும் கல்யாணம் முடிந்து பிள்ளைகள் இருக்கிறார்கள். ராமாயி ஆச்சிதான் இப்பொழுது அந்தக் குடும்பங்களில் வயதான பெரியவர்கள். அதோடு எல்லாரிடத்திலும் பற்றுகவும் பாசமாகவும் இருப்பார்கள். எனவே இராமநாதன் செட்டியாருக்கும் சீதை ஆச்சிக்கும் அவர்களிடம் மதிப்பும் பற்றும் உண்டு. அதனால் முக்கியமான செய்திகளில் அவர்களை ஒரு வார்த்தை கலந்து கொள்வார்கள்.

யானை வரும் முன் வரும் மணி ஓசை போல, "என்னடா ராமையா கண்டாங்கிக்காரன் வந்திருக் கானு? யாரு ஆறுமுகமா - இவன் யானை வெலே குருதை வெலே சொல்லுவானே! என்று கேட்டுக் கொண்டே ராமாயி ஆச்சி வந்து சேர்ந்தார்கள் அவர்கள் குரல் மிகவும் கலகலப்பான குரல்.

"ஆச்சி வாங்க - அயித்தை வாங்க" என்று இராமநாதன் செட்டியாரும் சீதை ஆச்சியும் வரவேற் றார்கள். கண்டாங்கிக்கார ஆறுமுகமும் பணிவோடு வரவேற்றார்.

"கல்யாணி! அப்பத்தா வந்திருக்காங்க பாய் எடுத்துக்கினு வந்து போடு" என்று பக்கத்து அறையில் இருந்த மகளுக்குக் கேட்கும்படியாகச் சீதை ஆச்சி சொன்னார்கள்.

"கொழுந்தன் மகன் ராமையா வீட்டுத் தரைக்குப் பாயா வேணும். வேண்டாமுடி கல்யாணி வா" என்று கூறியபடியே ராமாயி ஆச்சி கண்டாங்கிகளை விரித்துக் காட்டப் போட்டிருந்த பாய்களுக்குப் பக்கத்தில் அமர்ந்தார்கள்.

"அப்பத்தா!" என்று அழைத்தபடியே அங்கு வந்த கல்யாணி கையில் கொண்டு வந்த பர்மாப் பாயை ராமாயி ஆச்சி பக்கத்தில் விரித்து வைத்தாள்.

ஏண்டாப்பா ராமையா வேலாயுதம் வரலையா?

கல்யாணத்துக்கு இன்னம் ஒரு மாசம் இருக்கே- இப்பவே வந்து என்ன செய்யப் போறான்.

திருச்சியிலேதானே படிக்கிறான்?

ஆமா ஆச்சி.

அவன் பெரிய படிப்பாளி மகன் படிப்பாளி ஆச்சே. நீ வரச் சொன்னாக்கூட வரமாட்டானே. பொங்கப் புள்ளையாம்பியின்று வந்தாக்கூட ஒரு நாளைக்குமேலே தங்கமாட்டானே, ஓடிப் போயிடுவான்.

இராமநாதன் செட்டியார் மகன் வேலாயுதம் என்றால் ராமாயி ஆச்சிக்குக் கொள்ளைப் பிரியம். மூன்று மகன் வீட்டிலும் மொத்தம் ஐந்து பேரன்

மார்கள். அவர்கள் யாரும் வேலாயுதம் போல பண்பாகவும் பற்ருகவும் படிப்பில் வல்லவர்களாகவும் இல்லேயே என்ற மனக்குறை அவர்களுக்கு உண்டு. என்ருலும் தன் கொழுந்தனுர் பேரனுவது தங்கமான பிள்ளேயாக இருக்கிருனே என்பதில் அவர்களுக்கு நல்ல மகிழ்ச்சி உண்டு.

கண்டாங்கிக்கார ஆறுமுகம் பயபக்தியோடு பாய்க்கு அருகில் அமர்ந்தார். ஒரு டிரங்கைத் திறந்து அதிலிருந்த சேலேகளே எடுத்து பாயில் விரித்துக் காட்டத் தொடங்கினுர். சீதை ஆச்சி, ராமாயி ஆச்சி அருகில் அமர்ந்தார்கள். கல்யாணி அருகில் நின்று கொண்டிருந்தாள்.

''கல்யாணப் பொண்ணு என்னடி நிக்கிது. அப்பத் தாளும் ஆத்தாளும் அப்பச்சியும்தானே இருக்கம். சம்பந்தப்புரமா வந்திருக்கு. உக்காரு என்று ராமாயி ஆச்சி கூறினுர்கள்.'' நாணம் படர, முகம் சிவக்க கல்யாணி தன் தாயார் அருகில் அமர்ந்தாள். இராம நாதன் செட்டியார் சற்றுத் தொலேவிலிருந்த சோபாவில் அமர்ந்திருந்தார்கள்.

''நீ ஏண்டா ராமையா அங்கேயே உக்காந்துட்டே இப்படி வாவே'' என்று ராமாயி ஆச்சி கூறினுர்கள்.

''எட்டு வீட்டுக்கு நீங்க சேலே எடுப்பீங்க. எல்லாம் நீங்க பாத்து எடுத்தாச் சரிதான்.'' என்று ராமநாதன் செட்டியார் கூறினுர்கள்.

பெருமையால் ராமாயி ஆச்சியின் மனம் நிறைந்தது. அந்த மகிழ்ச்சியால் அவர்கள் முகம் மலர்ந்தது.

இது இந்திரா கலர்-இது தில்லாணு மோகனும்பாள்- இது நம் நாடு என்று பெயர்களேக் கூறியபடியே ஒவ்வொரு சேலேயாக எடுத்து ஆறுமுகம் பிரித்துக் காட்டத் தொடங்கினுர்.

''நாலு மாசத்திக்கி முந்தி தண்ணிப் பந்த சிதம்பரம் செட்டியார் வீட்டிலே இந்தப் புடவையை எங்க வீட்டுப் பிள்ளேயின்னு சொன்னே. இப்ப நம்ம நாடுங்கிறே-படம் வர வர மாத்திக்கிவே போல இருக்கு.'' ராமாயி ஆச்சி சிரிக்காமல் கூறினுர்கள்.

ஆறுமுகம் சிரித்துவிட்டார். சீதை ஆச்சி கல்யாணி, இராமநாதன் செட்டியார் பஞ்சநதம் பிள்ளே எல்லாருமே சிரித்து விட்டார்கள்.

இந்த நேரத்தில் அங்கே வந்த அருணுசல ஐயா ''என்ன எல்லாரும் சிரிக்கிறிய,ஓ! ராமாயி இருக்காளா? அப்பச் சிரிக்காமே இருக்க முடியாதே. நல்லாக் கல்லே கல்லேயாப் பேசுவாளே!'' என்று கூறிக் கொண்டே வந்தார்கள். அருணுசல அண்ணனு? வாங்க. கல்யாணிப் பொண்ணுக்குச் சேலே எடுக்கறமே. இப்ப அண்ணே இருந்தா நல்லா இருக்குமேன்னு சத்த முந்திதான் நெனச்சேன். சொல்லி வைச்சாப்பிலே வந்துட்டிகளே. எமன் ஏமாந்தா உங்களுக்கு நூறு வருசந்தான். ஏமாந்தா என்ன, நீங்கதான் கொள்ளேச் சமத்தனுச்சே - அவனக்கூட ஏமாத்திப்பிடுவிகளே! என்று ராமாயி ஆச்சி கூறினுர்கள்.

“நாங்க மருந்தே மாயத்தைத் தின்னு அவனே ஏமாத்தனும். நீ உங் குரலாலேயே பயமுறுத்திப் பிடுவியே!” என்று அருணாசல ஐயா சொன்னார்கள்.

மீண்டும் எல்லாரும் சிரித்து விட்டார்கள்.

“நீங்க சொல்றது நெசந்தாண்ணே. எங்க செட்டியார் இருக்கறப்போ என் குரலைக் கேட்டா எல்லாரும் ஆடுவாங்க. இப்ப எல்லாம் போச்சு. இப்ப என் மூணும் மருமக இருக்கிறாளே பணக்காரி மக பணக்காரி படிப்பாளி, அவ நான் ராத்திரியிலே வெத்திலை தட்டிப் போட்டுக்கப்படாதுங்கரு. எதிர்த்த வீட்டு சாமிநாதன் மருமககிட்டே போயி, ராத்திரி யெல்லாம் லொட்டு லொட்டுன்னு சத்தம் கேட்டுச்சு. களவானிதான் வாரானுக்கும்னு நெனச்சிட்டேன் அப்படீங்கிரு. “அடி! உன் மாமியா வெத்திலை தட்டிப் போட்டுக்கிட்டிருப்பாடி’ அப்படீன்னு அவ சொல்ரு. ‘இந்த வயதிலே வெத்திலை போட்டுக்காட்டி என்னு?’ன்னு இவ சொல்ரு. என்ன கொழுப்பு இருக்கணும்! இவ ஒரு நாளைக்கிப் பத்துத் தரம் புட்டாமா போடரு. நான் அஞ்சு தரம் வெத்திலை போடப்படாதா? இவ கையிலே அறுத்துக்கினது என்ன கெட்டுப் போச்சு? செட்டி பொயித்தாரு. இவளுகள்ளாம் ஆடருளுக” என்று இராமாயி ஆச்சி காரமாகச் கூறினார்கள்.

அங்கே மௌனம் நிலவியது.

சூழ்நிலையை ராமாயி ஆச்சி உணர்ந்தார்கள்.

“இந்தப் பேச்செல்லாம் ராமையாவுக்கும் சீதைக்கும் புடிக்காது. ஏதோ உங்களைப் பார்த்தவுடனே சொல்லணும்னு தோணிச்சு சொன்னேன்”, என்று அருணாசல ஐயாவைப் பார்த்துச் சொன்னார்கள்.

“சொன்னு என்ன? மனசிலே இருக்கிறதை சொல்லத்தானே வேணும்? ஆனு ஒண்ணு, காலத்தை அனுசரிச்சு இதையெல்லாம் பொருட்படுத்தப்படாது. யாரு என்னத்தைச் சொன்னாலும் அதையெல்லாம் குப்பையைத் தள்ற மாதிரி தள்ளிட்டு நம்பளைப்போல வயசானவங்க நிம்மதியா இருக்கணும். அதை விட்டுட்டுச் சில வீட்டிலே இருக்கிற பெரியவங்க குப்பையைத் தள்றதுக்குப் பதிலா வெளியே தள்ளினதை அள்ளியாந்து வச்சிக்கிற மாதிரி தேவையில்லாத விசயங்களைப் பேசிச் சண்டை போட்டு, அவங்க நிம்மதியையும் கெடுத்துக்கினு மத்தவங்க நிம்மதியையும் கெடுத்துப்புடுருங்க. பெரியவங்கள்ளாம் தெய்வம் மாதிரி. கோயிலுக்கு நாலு நல்லவனும் வருவான் கெட்டவனும் வருவான். அது மாதிரி குடும்பத்திலே பல குணம் உள்ளவர்களும் இருக்கத்தான் செய்வாங்க. அப்பப்போ கண்டிக்கணுமே தவிர அதே பொழப்பா பேசிக்கிட்டிருக்கப் படாது. நாம குடும்பத்திலே எல்லாருக்கும் துணையா இருக்கிறம்னு அவங்க நினைக்கணுமே தவிர வினையா இருக்கிறம்னு நெனைக்கப்படாது.” என்று சிரித்துக் கொண்டே ஆனால் கருரான குரலில் அருணாசல ஐயா கூறினார்கள்.

“அடி ஆத்தி. அண்ணன் ஒரு பிரசங்கமே பண்ணிட்டாகளே! சரி, அந்தப் பேச்சை விட்டுட்டு நாம,

கண்டாங்கியைப் பார்ப்போம்'' என்று கூறிவிட்டு ராமாயி ஆச்சி கண்டாங்கிகளைப் பார்க்கத் தொடங்கினார்கள்.

''ராமாயி! ஆறுமுகம் நம்பிக்கையான புள்ளை. அதனாலே எடுக்கற சேலைகளை இவங்கிட்டேயே பார்த்து எடுத்துக்கலாம். உலகத்திலே எல்லாரும் கட்டிக்கிறதுக்குத்தான் சேலை வாங்குவாங்க. நம்ம சாதிக்காரங்கதான் சாமானோடை சாமானா வக்கிறதுக்குச் சேலை வாங்கிறோம். சாமானோடை சாமானா அள்ளியும் வைக்கிறோம். அதை இப்ப பேசி ஆகப் போறது ஒண்ணுமில்லே. நம்ம ராமையா மகளுக்குச் சேலைக்குப் பணங் குடுக்கிறதாத்தான் பேசியிருக்கு. வைக்கிறதுக்கு அஞ்சு சேலை எடுத்தாப் போதும். அப்புறம் வீட்டுத் தேவைகளுக்கு வேணுங்கிறதை எடுங்க'' என்று அருணாசல ஐயா சொன்னார்கள்.

இந்தச் சமயத்தில் சமையற்காரப் பொன்னையா எல்லோருக்கும் காபி கொண்டு வந்து கொடுத்தான்.

விரைவிலேயே ராமாயி ஆச்சியும் சீதை ஆச்சியும் சேலைகளைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அவற்றை அருணாசல ஐயாவும் பார்த்தார்கள். கல்யாணியினுடைய விருப்பத்தையும் அறிந்து கொண்டார்கள்.

அதிகமாகப் பேரம் ஒன்றும் செய்யாமல் ஆறுமுகத்தைக் கலந்து அவர்கள் விலைகளை முடிவு செய்தார்கள். அப்பொழுதே ரொக்கத்தைக் கொடுத்து ராமநாதன் செட்டியார் ஆறுமுகத்தை அனுப்பி வைத்தார்கள்.

ராமாயி ஆச்சி விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள்.

''என்ன ராமையா உன் மச்சினன் விசயமா அப்புறம் என்ன முடிவு செஞ்சீங்க?'' என்று அருணாசல ஐயா கேட்டார்கள்.

அதைப் பற்றி அவர்கள் கேட்பார்களென்று எதிர்பார்த்ததுதான். ஆனால் தங்கள் எண்ணத்தை அவர்களிடம் எப்படிச் சொல்வது என்பதுதான் ராமநாதன் செட்டியாருக்கு யோசனையாக இருந்தது.

அவர்கள் சீதை ஆச்சி முகத்தைப் பார்த்தார்கள். அவர்கள் செட்டியார் முகத்தைப் பார்த்தார்கள்.

அவர்கள் இருவரையும் அருணாசல ஐயா பார்த்தார்கள்.

''ஏன் இப்படித் தயங்கறீங்க? என்னதான் முடிவு பண்ணினீங்க, சொல்லுங்களேன்'' என்று சிரித்துக் கொண்டே அருணாசல ஐயா கேட்டார்கள்.

(தொடரும்)

நகரத்தார் முன்னேற்றக் கழகம்

தலைவர்: டாக்டர் வ. சுப. மாணிக்கனார்

நாட்டுக்கோட்டை நகரத்தார் குலம் மூவேந்தர் காலந் தொட்டுத் தொன்மையானது; தமிழகத்தும் இந்தியா முழுவதும் கடல் கடந்தும் வாணிகம் போலத் தொண்டும் செய்தது; தமிழ் மொழிக்கும் தமிழர் சமயங்கட்கும் வழி வழி காப்பளித்தது; குமரி முதல் இமயம்வரை தெய்வத்திருப்பணி கண்டது. அயல் நாடுகளில் சோழர்கள் போலத் தமிழ் நாகரிகத்தைப் பரப்பியது; எல்லா இனமும் எல்லா மதமும் எல்லா மொழியும் எல்லா நாடும் வாழுமாறு அரும்பெருங்கொடை செய்த பொது நோக்குடையது. காலத்திற் கேற்ப, தனிப் பல்கலைக்கழகம், கல்லூரி பள்ளிகளும், நூலாலை, தொழிற்சாலைகளும் நிறுவி வருவது. சூழ்நிலைகள் எவ்வளவு எதிர்ப்பாக இருந்தாலும் பொருளீட்டுவதில் குன்றா முயற்சியும் அருளீட்டுவதில் குறையா முனைப்பும் உடையது. திருப்பணிக்கும் தமிழ்ப் பணிக்கும் தனி வரலாறு வரையும் அளவுக்குக் கொடை வளம் செய்த வண்புகழுடையது. தனக்கெனச் சிறிதும் பிறர்க் கெனப் பெரிதும் வாழ்ந்த ஒரு குலம் தமிழகத்தில் வேறு உண்டா?

இத்தனி வணிகக் குலம் இன்று முன்னேறுவதுபோலத் தோன்றி னாலும் தீய போக்குக்கள் சமூகத்தில் தலையெடுத்துவிட்டன. படு வீழ்ச்சிப் பாதையில் சமூகம் ஓடிக்கொண்டிருக்கின்றது. புள்ளி தோறும் வறுமை புகுந்துவிட்டது; குடியிருந்த ஊர்கள் குறைந்து விட்டன. படியிருந்த வீடுகள் இடிபட்டன. கன்னியர்கள் மூத்துக் கண்கலங்குகின்றனர். பெண் பெற்றோர்கள் கவலைக்கடலில் நீந்து கின்றனர். குமரிப் பெருக்கம் குலத்தைக் குறைக்கின்றது.

எளிய திருமணத்தால் புள்ளிகளும் பெருக வேண்டும். பரந்த தொழில் வளத்தால் புள்ளிதோறும் பொருள் வளமும் பெருக வேண்டும். சிறிய மனைகளால் ஊர் செழிக்க வேண்டும். வருங்கால இளைஞர்களும் இளைஞிகளும் இக்குலத்துப் பிறப்பை நன்கு மதிக்க வேண்டும். இவற்றுக்கு என்ன வேண்டும்? சமூகப் போக்கு அழி போக்காகக் கூடாது. சடங்குச் செலவு முறைகள் உயிர்ச் சுமை யாகக் கூடாது. இனிமையும் எளிமையுமே சமூகப் புள்ளிகளை வாழ்விக்கும். இவையே நகரத்தார்க்கு வழி வழி முன்னேற்றம் தரும். இதுவே கழகத்தின் குறிக்கோள்.

இதனை முறையாகவும் பண்பாகவும் உறுதியாகவும்கூடிய விரை வாகவும் நிறைவேற்றி வைப்பதற்கு "நகரத்தார் முன்னேற்றக் கழகம்" என்ற ஒரு சமுதாயக் கழகத்தை நிறுவியிருக்கின்றோம்.

தன வணிகச் சமூகத்துப் பெரியவர்களும் இளைஞர்களும் பல்வகைப் பட்டதாரிகளும் பல்வேறு தொழிலிலிருப்பவர்களும் செல்வர்களும் எளியவர்களும் பெண்களும் ஆண்களும் முன்னேற் றத்திற்கு எந்த வகையில் எந்த முறையில் செயற்படலாம் என்று தத்தம் கருத்தினைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதியனுப்ப வேண்டுகின்றோம். இவை செயல்நோக்கில் அமைய வேண்டும்.

நிலையுறுப்பினர்கள்

1. டாக்டர் வா. சுப. மாணிக்கம் (தலைவர்)
 'கதிரகம் - காரைக்குடி-2
2. டாக்டர் மெ. சுந்தரம்
3. டாக்டர் சுப. அண்ணாமலை
4. டாக்டர் இராம. பெரியகருப்பன்
5. டாக்டர் வெ. தெ. மாணிக்கம்
6. புலவர் வெ. சு. அழகப்பன், எம்.ஓ.எல்.
7. திரு. சுப. திண்ணப்பன், எம்.ஏ., எம்.லிட்டு
8. புலவர் கதி. சுந்தரம்
9. திரு. ரெ. சிங்காரவடிவேலன், எம்.ஏ., பி.டி.
 (இணைச் செயலர்)
10. திரு. மா. கண்ணப்பன், எம்.ஏ., பி.டி.
 (இணைச் செயலர்)
 ''முத்துவிலாலம்'' புதுநகர்
 காரைக்குடி-1

இரண்டு நாடுகளில் இருபது நாட்கள்

எம். அருணாசலம்

வரலாற்றுச் சிறப்புமிக்க உலக சமாதானப் பேரவைக் கூட்டம் இனிது நிறைவேறியதைக் கொண்டாடும் பொருட்டும், உறுப்பினர்களைக் கௌரவிக்கும் பொருட்டும் 25ம் நாள் இரவு பேரவையின் தலைவர் ஒரு விழா ஏற்பாடு செய்திருந்தார். இந் நிகழ்ச்சி கவின்மிகு ஜெர்மன் ஸ்டேட் ஆபரா மண்டபத்தில் நடைபெற்றது. தொன்மை மிக்க கிரேக்க பாணியில் அமைந்த இம் மண்டபம் உலகப் போரில் இழந்த பொலிவைத் தொன்மை மாறாது புதுப்பித்து எழில்மிகு கலைக் கூடமாக ஆக்கியுள்ளன ரென்பது அறிந்து நாங்கள் வியப் படைந்தோம். அன்று இரவு அறுசுவையுடைய சிறப்பு விருந் துக்குப் பின், பாலே நடனக் காட்சியும் கண்களுக்கு இனிய விருந்தாக அமைந்தது.

இம் மாநாட்டில் பல்வேறு நாடு களிலிருந்து கூடிய பலதரப்பட்ட வர்களைக் காணும் பேறும் கலந்து உறவாடும் வாய்ப்பும் கிடைத்த தென்றால் அது மிகையாகாது. குறிப்பாக இத்தாலி நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினரான அன்டோனி கசுப்பே (Antoni Giusuppe) எனது உற்ற நண்ப ரானார். அன்னார் பாரதத்தின் பெருமையினைப் போற்றிக் கூறிய துடன் நம் நாட்டின் வளத்திலும் முன்னேற்றத்திலும் மிகவும் அக் கறை காட்டினார். நம் நாட்டிற் கும் வருகை புரிய வேண்டு மென்ற ஆவல் மிகவுண்டு என் றும் கூறினார்.

கானடா நாட்டின் அமைதிக் குழுவின் தலைவரும் அவரது துணைவியாரும் ''கானடாவில் உள்ள தமிழர்களுடன் நெருங்கிப் பழகியதாகவும் அவர்களுடைய அன்பும் பண்பும் எங்களை மிகவும் கவர்ந்ததென்றும்'' கூறியதைக் கேட்டு என் உள்ளம் பூரித்தது.

கானா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் பாரதத்தின் பெருமை யினைக் கேள்விப் பட்டிருப்பதாக வும் விரைவில் நம் நாட்டிற்கு வர விரும்புவதாகவும் சொன்னார்.

அமெரிக்காவில் கலிபோர்னி யாவில் உள்ள டெலிவிஷன் நட் சத்திரமான ஜேனல் ஆல்டென் (Janell Alden) இம் மாநாட்டின் ஒரு பிரதிநிதி என்றால் உங்க ளுக்கு வியப்பாக இருக்கிறதல் லவா? இம் மாநாட்டின் தனிச்

சிறப்பே, ஒரு அரசியல் மாநாடாக இல்லாமல் சமூகத்தின் பல தரப்பட்ட மக்களும், சமாதானத்தில் நாட்டமுடையவர்களும் கலந்து கொண்டு உலகுக்கு வேண்டுகோள் விடுத்ததுவாகும். அந் நட்சத்திரம் அமெரிக்க வாழ்க்கையைப் பற்றிக் கூறி, வருமானத்தில் பெரும் பகுதி வரியாகக் கரைந்து விடுவதாகவும், வரி விகிதம் அமெரிக்காவில் மிகவும் அதிகம் என்றும் அங்கலாய்த்துக் கொண்டார். என்ன! இன்னுமா அம் மாநாட்டில் சந்தித்தவர்களைப் பற்றிக் கூறவேண்டும்? உங்களுக்குப் போரடிக்கவில்லை! நீங்கள் கேட்டாலும் இனி அது பற்றி நான் கூறப் போவதில்லை.

இனி எங்களுடைய அலுவல் ஊர் சுற்றுவதே! 25ஆம் நாள் பெர்லினில் உள்ள வரலாற்றுச் சிறப்புடைய இடங்களையும், மற்றும் முக்கியப் பகுதிகளையும் கண்டோம். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இரண்டாம் உலகப் போரின் அழியாச் சின்னங்கள். இவை போரின் அழிவுச் சக்தியையும், அமைதியின் ஆக்கச் சக்தியையும் உலகிற்குப் பறை சாற்றிக் கொண்டுள்ளன. சமாதானப் பேரவையில் பங்கு பெற்ற நாங்கள் இதனை நிதர்சனமாக உணர முடிந்தது. மாபெரும் இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி அடைந்த நாசங்களும், அதன் பின் மிகக் குறுகிய காலத்தில் அந்நாடு அடைந்துள்ள வியக்கத்தக்க முன்னேற்றமும் கண்கூடாகத் தெரிகின்றன. பல சிதைந்த மண்டபங்களும், சின்னங்களும் இன்னும் அப்படியே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பல, பண்டைய அமைப்பு முறை மாருது புதுப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு அருகே பல அடுக்குகள் கொண்ட நவீன மாட மாளிகைகளும் உருவாகி உள்ளன. இன்னும் உருவாகிய வண்ணம் இருக்கின்றன.

அடுத்து இரண்டாம் உலகப் போரின் கதாநாயகனுகக் கருதப்படும் ஹிட்லர் வாழ்ந்து பல சாகசங்கள் நிகழ்த்திய இல்லத்தினையும், அவர் வாழ்ந்த பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்தோம். ரஷ்யாவின் சிற்பியான லெனினும், ஹிட்லரும் கலந்து பேசிய இடங்களையும் கண்டோம். இவற்றை எல்லாம் அப்போதிருந்த நிலையிலேயே பாதுகாத்து வருவதாகக் கூறினுர்கள்.

பெர்லின் நகரம் உலகப் போருக்குப் பின் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி (மேற்கு பெர்லின்) மேலை நாடுகள் வசமும், கிழக்கு பெர்லின் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வசம் அதன் தலைநகராகவும் உள்ளது. ஒரே நகரம் இரண்டாக்கப்பட்டுக் குறுக்குச் சுவர் எழுப்பப்பட்டு இரு நாடுகளாக உள்ள தென்ருல் அது பெர்லின் ஒன்றே யாகும்.

வல்லரசுகளின் போக்கினுல் ஏற்பட்டுள்ள இந் நிலைக்கு சந்திர மண்டலத்திற்குச் சென்று வரும் இந் நூற்ருண்டில் ஒரு தீர்வு காண வேண்டியது மிக அவசியமாகும். இதனை உணர்ந்த இடம் இரு பெர்லினுக்கும் இடையில் உள்ள பிராண்டன்பூர்க் கேட். இவ்வாயிலிற்கு சுமார் 100 அடிக்கு அப்பால் உள்ளதுதான் மேற்கு பெர்லின் அமைத்துள்ள கதை பல கூறும் குறுக்குச் சுவர். மே. பெர்லினிலிருந்து கி. பெர்லினுக்கு வரத் தடை ஏதும் இல்லை. ஆனுல் கி. பெர்லின் மக்கள் மே பெர்லினுக்குச் சென்று வர கி. பெர்லின் அரசின் அனுமதி

வேண்டுமாம். இரு நகர்களுக்கும் போக்குவரத்து பாதாள இரயில் அல்லது விமானம் மூலமேயாகும். சாலைப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. நாமும்தான் மே. பெர்லின் சென்று அந்நகரின் சிறப்பினைக் கண்டு வரலாமென்று பாதாள இரயிலில் சென்றோம். விசா இல்லை என்ற காரணத்தினால் எல்லைக்கு அப்பால் மே. பெர்லின் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. பாதாள இரயிலில் சென்றோம் என்ற ஒரே திருப்தியில் திரும்பினோம்.

கட்டிடங்களும், அவற்றுள் குறிப்பிடத்தக்க ஆசிரியர் மாளிகையும், காங்கிரசு மண்டபமும் உள்ளன.

தொல்பொருள் காட்சி சாலைகள், ஒவ்வொரு துறையிலும் மியூசியங்கள், நூல் நிலையங்கள் இல்லாத நகரே இல்லை எனலாம். மேலும் சிறப்பு மிகு பூங்காக்களும் அவற்றில் சிறுவர்களுக்கென விளையாட்டு அரங்குகளும் எங்கும் காணலாம். பெர்லினில் உள்ள பெரியதொர் விலங்குகள் பூங்கா காண்பதற்கரியது.




மேற்கு, கிழக்கு பெர்லின் நகரங்களின் இடையில் உள்ள பிராண்டன்புர்க் வாயிலில் ஆசிரியரும் டாக்டரும்!

நகரின் சிறப்பான பகுதி அலெக்ஸாண்டர் சதுக்கம் எனலாம். இதனைச் சுருக்கமாக அலெக்ஸ் என்றே அழைக்கின்றனர். இங்குதான் பல பெரிய

நதிகள் இல்லாத நகர்களே இல்லை. சிற்றாறோ, பெரு நதியோ நகர்களுக்கு அணி செய்கின்றன. லண்டன் நகருக்கு ஒரு தேம்சு நதி போல் பெர்லினுக்கு ஒரு

சப்ரிநதி, நகரினைச் சுற்றி வருகிறது. நம்மையும் மகிழ்விக்கிறது. உல்லாசப் படகில் இந் நதியில் சென்ருல் நகரின் பல பகுதிகளின் அழகு காணக் கண்கொள்ளாக் காட்சியாகும். இதனுடன் காண்போம் என்று ஏங்கியது என்மனம். என் கனவு விரைவில் நனவாகும் என்கு எண்ணுகிறேன். அதற்கான பூர்வாங்க வேலைகள் நடப்பது அறிந்து மகிழ்கின்றேன்.



பேரவைக் கூட்டத்தில் கட்டுரை ஆசிரியரும் ஒற்றுமைக் குழுவின் சென்னைக் கிளைத் தலைவர் டாக்டர் ராமகிருஷ்ணன் அவர்களும் வீற்றிருக்கின்றார்கள்.

சென்னை நகரத்தினையும் இங்கு பாயும் கூவம் நதியினையும் ஒப்பு நோக்கினேன். மலையும் மடுவுமெனத் தெரிந்தது என்று தான் கூவம் சீரமைப்புத் திட்டம் செயலாகி சப்ரி நதிக் காட்சியினைக்

கி. ஜெர்மனி மக்களின் வாழ்க்கையினையும், கலாச்சாரத்தினையும், பண்பினையும் எனக்கு ஏற்பட்ட ஒரு புதிய அனுபவத்தினையும் அடுத்துக் காண்போமா?

சென்னை-14, நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸில் அச்சிடப் பெற்று, சேது நிலையத்திற்காக வெளியிடுபவர் பழ. சேது ஆச்சி, 12, இராமாநுசம் தெரு, சென்னை-17, தமிழ்நாடு.
ஆசிரியர்: புலவர்நாகசண்முகம்.